
இன்றையவேளாண்செய்திகள்

## கொடைக்கானலில் தொடர் மழை: 5 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பிய குடிநீர்த் தேக்கங்கள்

கொடைக்கானலில் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாக, 5 ஆண்டுகளுக்குப் பிறகு குடிநீர்த் தேக்கங்கள் நிறைந்துள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொடைக்கானலில் கடந்த 2 வாரங்களாக விட்டுவிட்டு மழை பெய்து வந்தது. இந் நிலையில், கடந்த 4 நாள்களாக பலத்த மழை பெய்தது. இதனால், கொடைக்கானல் பகுதிகளில் உள்ள குடிநீர்த் தேக்கங்களான அப்சர்வேட்டரியிலுள்ள குடிநீர்த் தேக்கம் (28 அடி) நிறைந்து, உபரி நீர் வெளியேறி வருகிறது. அதேபோன்று, மனோரஞ்சிதம் அணை (38 அடி) முழுவதும் நிறைந்து, அதிக அளவில் உபரி நீர் வெளியேறி வருகிறது. கடந்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த 2 அணைகளும் ஒரே நேரத்தில் நிரம்பியுள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்நிலையில், இங்கு தொடர்ந்து சாரல் மழையும், அவ்வப்போது மிதமான மழையும் பெய்து வருவதால், வியாழக்கிழமை அதிகாலை கொடைக்கானல்-வத்தலகுண்டு செல்லும் சாலையான குருசடி கல்லறைமேடு பகுதியில் மரம் விழுந்தது. இதனால், 2 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர், நெடுஞ்சாலைத் துறைப் பணியாளர்கள் மரங்களை அகற்றி, போக்குவரத்தை சீர்செய்தனர். தொடர் மழையின் காரணமாக, கொடைக்கானல், மதுரை-பழனி-அடுக்கம்-கும்பக்கரை செல்லும் மலைச் சாலைகளின் பல இடங்களில் சேதமடைந்துள்ளன. பல இடங்களில் சிறு சிறு பாறைகள்

உருண்டு கிடக்கின்றன. இதனால், வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஏரியைச் சுற்றியுள்ள பல இடங்களில் உள்ள அடைப்புகள் சரி செய்யப்பட்டதால், பல்வேறு இடங்களிலிருந்து வரும் மழை நீரால் ஏரி நிரம்பி, அதிக அளவில் உபரி நீர் வெளியே செல்கிறது. நீரின் ஓட்டமும் அதிகமாக இருப்பதால், சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி செய்ய முடியவில்லை. எனவே, ஏரிப்பகுதி அமைதியாக காணப்படுகிறது.

## மன்னார் வளைகுடாவில் காற்று மேலடுக்கு சுழற்சி: தமிழகத்தில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்பு



மன்னார் வளைகுடா அருகே உருவாகியுள்ள காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் பல இடங்களில் வெள்ளிக்கிழமை (அக்.24) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. தீபாவளி தினமான புதன்கிழமை மழை சற்று ஓய்ந்திருந்தது. ஆனால், வியாழக்கிழமை காலையிலிருந்து பல இடங்களில் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரியில் 110 மில்லி மீட்டரும், சேரன்மகாதேவியில் 100 மில்லி மீட்டரும் மழை பதிவானது. சென்னையில் வியாழக்கிழமை மாலை வரை 30 மில்லி மீட்டர் மழை பெய்தது. இந்நிலையில், மன்னார் வளைகுடா பகுதியில் புதிதாக காற்று மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது. இதன் காரணமாக, அடுத்த இரு நாள்களுக்கு தமிழகம் முழுவதும் தொடர் மழை இருக்கும் என்றும், தென் மாவட்டங்களில் சில இடங்களில் இடியுடன் கூடிய பலத்த

மழை இருக்கும் என்றும் முன்னறிவிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. இந்த ஆண்டு பருவமழை வழக்கத்தை விட அதிக அளவு பெய்யும் என்று வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதை உறுதிப்படுத்தும் விதமாக மாநிலத்தின் பல இடங்களில் தொடர்ந்து மழை பெய்து, சாலைகள் அனைத்தும் வெள்ளக் காடாய் மாறியுள்ளது. **மீனவர்களுக்கு எச்சரிக்கை:** பருவமழை, காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, கடலில் 45-55 கி.மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீச வாய்ப்புள்ளது. இதனால் கடலுக்குள் செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது. வியாழக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி - 110, சேரன்மகாதேவி - 100, சீர்காழி, ராமேசுவரம், திருவாடானை, திருபுவனம், சத்தியமங்கலம் - 60, ராமநாதபுரம் மாவட்டம், தொண்டி, தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், தேவகோட்டை, பாபநாசம் - 50, கோத்தகிரி, குழித்துறை, பாம்பன், பெரியாறு, பாளையங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, சிவகங்கை, கமுதி - 40.

## <u>நீர்வரத்து அதிகரிப்பு: வைகை அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்வு</u>



தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக சாரல் மழை பெய்து வருவதால், வைகை அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது. வைகை அணையின்

நீர்ப் பிடிப்புப் பகுதிகளான மேகமலை, முல்லைப் பெரியாறு பகுதிகளில் கடந்த மூன்று வருடங்களாக போதிய மழை இல்லாததால், அணைக்கு போதிய நீர் வரத்து இல்லை. இதனால் அணையின் மொத்த உயரமான 71 அடியில், நீர் தேக்கி வைக்கக்கூடிய அளவான 70 அடியை கடந்த மூன்று வருடங்களாக நீர்மட்டம் எட்டவில்லை. இந்த நிலையில், வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதையொட்டி, கடந்த சில நாள்களாக தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், வைகை அணைக்கு நீர்வரத்து 2,700 கன அடி முதல் 3,700 கன அடி வரை உள்ளது. கடந்த புதன்கிழமை காலையில் 46.60 ஆக இருந்த நீர்மட்டம் வியாழக்கிழமை காலையில் 48.60 அடியை எட்டி, ஒரே நாளில் 2 அடி உயர்ந்துள்ளது. தற்போது தேனி மாவட்டத்தில் சாரல் மழை பெய்து வருவதால், அணையின் நீர் மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

## <u>சோத்துப்பாறை, மஞ்சளாறு அணைகளிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு</u>

பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணை மற்றும் மஞ்சளாறு அணைகளிலிருந்து வியாழக்கிழமை பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

**சோத்துப்பாறைஅணை**

சோத்துப்பாறை அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, அணையில் நீர் நிரம்பி வழிகிறது. எனவே, அரசு உத்தரவின்பேரில், அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர திறந்து விடப்பட்டது. இந்த அணையின் மொத்த உயரம் 126.28 அடி. அணைக்கு விநாடிக்கு 380 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து விநாடிக்கு 380 கனஅடி தண்ணீர் வெளியேற்றப் படுகிறது. அணையில் 100.22 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. இந்த அணை தண்ணீர் முலம், பழைய மற்றும் புதிய

ஆயக்கட்டுப் பகுதிகளிலுள்ள 2,865 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

**மஞ்சளாறுஅணை**

மஞ்சளாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான தலையாறு, மூலையாறு, இருட்டாறு, வரட்டாறு ஆகிய பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, இந்த அணையில் நீர் நிரம்பி வழிகிறது. எனவே, அரசு உத்தரவின்பேரில், அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த அணையின் உயரம் 57 அடி. அணைக்கு விநாடிக்கு 988 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து விநாடிக்கு 988 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 472.64 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பாக உள்ளது. இந்த அணை தண்ணீர் மூலம், தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலுள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளைச் சேர்ந்த 5,259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இரு அணைகளிலிருந்தும் வரும் மார்ச் மாதம் 15ம் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படுகிறது. எனவே, விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு, பொதுப்பணித் துறை அலுவலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும், இந் நிகழ்ச்சியின்போது சிறப்புப் பூஜைகள் நடத்தப்பட்டன. தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில், சட்டப்பேரவை உறுப்பினர் லாசர், நகர்மன்றத் தலைவர் ஓ. ராஜா, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எம். செல்லமுத்து, அணைத் திட்டக் கண்காணிப்புப் பொறியாளர் எஸ். ரமேஷ், செயற் பொறியாளர் எம். சேகர், உதவிச் செயற் பொறியாளர் ஆர். பாண்டி, உதவிப் பொறியாளர்கள் மல்லிகா கண்ணன், வருவாய் கோட்டாட்சியர் எஸ். ஜானகி, வட்டாட்சியர் ஆர். ரமேஷ் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

**அணைகளின் நீர் மட்டம்**

முல்லைப் பெரியாறு நீர் மட்டம் - 128.80 அடி (152)

நீர் வரத்து - 2,658 கனஅடி

நீர் வெளியேற்றம் -

1,400 கனஅடி

வைகை அணை

நீர் மட்டம் - 48.60 அடி (71)

நீர் வரத்து - 3,766 கனஅடி

நீர் வெளியேற்றம் -

1,660 கனஅடி

மழைப் பொழிவு (மி.மீ): பெரியகுளம் 15.60, வைகை அணை 9, மஞ்சளாறு அணை 17, ஆண்டிபட்டி 11.20, அரண்மனைபுதூர் 9, வீரபாண்டி 34, தேக்கடி 56, பெரியாறு 42, கூடலூர் 9, போடிநாயக்கனூர் 8.80, உத்தமபாளையம் 12, சோத்துப்பாறை 28.

**சின்னமனூர் பி.டி..ஆர். கால்வாயிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பி.டி.ஆர். மற்றும் தந்தைப் பெரியார் கால்வாய்களில் இருந்து, வியாழக்கிழமை பாசனத்துக்காக தண்ணீரை மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி திறந்துவைத்தார். உத்தமபாளையம் அடுத்துள்ள ராமசாமிநாயக்கன்பட்டியிலுள்ள கருகன்டான்குளம் தலை மதகுப் பகுதியில், 1992ஆம் ஆண்டு ரூ. 35 லட்சம் செலவில் பெரியார் கால்வாய் வெட்டப்பட்டு, அதன்மூலம் வெளியேற்றப்படும் தண்ணீர் சின்னமனூர்

அருகிலுள்ள பி.டி.ஆர். கால்வாயில் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழக அரசு உத்தரவின்பேரில், உத்தமபாளையம் மற்றும் சின்னமனூர் ஒன்றியப் பகுதிகளிலுள்ள விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில், பெரியார் கால்வாயிலிருந்து பி.டி.ஆர். கால்வாய்க்கு, பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. உத்தமபாளையம் ஒன்றியத்திலுள்ள 468 ஏக்கர் மற்றும் சின்னமனூர் ஒன்றியத்திலுள்ள 4,678 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன்பெறும் வகையில், வியாழக்கிழமை பெரியாற்றில் இருந்து திறந்துவிடப்படும் கூடுதலான 100 கனஅடி தண்ணீர் தொடர்ந்து 120 நாள்கள் திறந்து விடப்படுவதாக இருக்கிறது. இதனால், சின்னமனூர், சீலையம்பட்டி, வேப்பம்பட்டி, சீப்பாலக்கோட்டை, பூமலைக்குண்டு, தர்மாபுரி, தாடிச்சேரி, வெங்கடாசலபுரம், கொடுவிலார்பட்டி, ஜங்கல்பட்டி, கோவிந்த நகரம் மற்றும் பாலகிருஷ்ணாபுரம் ஆகிய 12 கிராம விவசாய நிலங்கள் பயன்பெறும். மேலும், மாவட்ட நிர்வாகம், பி.டி.ராசன் மற்றும் தந்தை பெரியார் கால்வாய் மூலமாக விவசாயதுக்கு வெளியேற்றபடும் தண்ணீரை, விவசாயிகள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். முல்லைப் பெரியாறு நீர்ப்பிடிப்புப் பகுதியில் பருவ மழை தவறி போதுமான மழையில்லாத சூழ்நிலை ஏற்படும் காலத்தில், முறைப்பாசன முறை அமல்படுத்தப்படும் எனவும், விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், பெரியாறு-வைகை வடிநிலக் கோட்டச் செயற்பொறியாளர் முத்துப்பாண்டி, அதிமுக மாவட்டச் செயலர் சிவக்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் மகாலிங்கம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பாண்டியராஜன், உத்தமபாளையம் வட்டாட்சியர் சேகர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## <u>குதிரைவாலி சாகுபடி: வேளாண் அதிகாரி ஆலோசனை</u>

திருவாடானை தாலுகா விவசாயிகள் குறைந்த மழை அளவில் குதிரைவாலி சாகுபடி செய்யலாம் என வேளாண் அதிகாரி கூறியுள்ளார்.

திருவாடானையில் வேளாண் விரிவாக்க துணை இயக்க திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் ஆண்டில் குதிரைவாலி சாகுபடி செய்ய 10 விவசாயிகளுக்கு கோ-2 குதிரைவாலி விதைகளை வேளாண் உதவி இயக்குநர் நாகராஜ் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், தாலுகா முழுவதும் பரவலான மழை பெய்து வருகிறது. இருப்பினும் தற்போது போதுமான மழை இல்லாமல் இருப்பதால் வறட்சியான காலத்திலும் நெல் சாகுபடி பரப்பளவில் குறைந்தது 10 சதவீதம் குதிரைவாலி சிறுதானிய பயிரை சாகுபடி செய்தால் குறைந்த பட்ச வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. இப்பகுதி மானாவாரியில் குதிரைவாலி சாகுபடி செலவு ஏக்கருக்கு ரூ.5000 முதல் ரூ.6000 வரை ஆகும். ஆனால் நிகர வருமானம் 1 ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை கிடைக்கும். எனவே விவசாயிகள் குறைந்த தண்ணீர் தேவையுள்ள பயிரினை சாகுபடி செய்து வறட்சியான காலங்களிலும் நிச்சயமான வருமானத்தை பெற்றிட முடியும் என்றார்.

## மரவள்ளிக் கிழங்கை உடனே விற்பனை செய்யலாம்!

அறுவடை செய்த மரவள்ளிக் கிழங்கை உடனே விற்கலாம் என்று, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக, வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு:

இந்தியா மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் உலக அளவில் 10 ஆவது இடத்தில் உள்ளது. மொத்த மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி 2.14 லட்சம் எக்டேர் பரப்பளவில் இருந்து, 7.74 மில்லியன் டன் ஆகும். இந்திய ஏற்றுமதி 73.7 மில்லியனில் (2012-13) இருந்து, 133.2 மில்லியனாக (2013-14) ஆக அதிகரித்துள்ளது. இந்திய மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் தமிழகம் 64 சதவீத பங்களிப்பைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது. மேலும், மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியிலும் பெரும்பங்கு வகிக்கிறது. ஒரு லட்சம் எக்டேர்

பரப்பளவில் குறிப்பாக நாமக்கல், தருமபுரி, சேலம், விழுப்புரம், திருச்சி, ஈரோடு, கடலூர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் மரவள்ளிக் கிழங்கு முக்கியப் பயிராக பயிரிடப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கு விலை நிர்ணயம் செய்வதில், மாவுப்பொருள் (ஸ்டார்ச்), ஜவ்வரிசியின் விலை முக்கியப் பங்கு வகிக்கிறது. மாவுப்பொருள் (ஸ்டார்ச்), ஜவ்வரிசி உற்பத்தி, மக்காச்சோள மாவுப்பொருள் (ஸ்டார்ச்) கலப்படத்தால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக கடந்த ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் குவின்டாலுக்கு ரூ. 1,100 முதல் ரூ. 1,300 வரை விற்ற மரவள்ளிக் கிழங்கு விலை தற்போது குறைந்து குவின்டால் ரூ. 800 முதல் ரூ. 900 வரை விற்கப்படுகிறது.இதேபோல 90 கிலோ மூட்டை ஒன்று ரூ. 4,500-க்கு விற்கப்பட்ட மரவள்ளிக் கிழங்கு மாவுப்பொருள் (ஸ்டார்ச்) கடுமையாக விலை குறைந்து ரூ. 2,200-க்கு விற்கப்படுகிறது. மாவுப்பொருள் (ஸ்டார்ச்) மற்றும் ஜவ்வரிசிப் பொருட்கள் இடையே உள்ள விலை வேறுபாடு ரூ. 4,000 ஆக உள்ளது. இதன் காரணமாக மரவள்ளிக் கிழங்கு விலை குறைந்துள்ளதால் விவசாயிகளின் லாபம் பாதிக்கப்படும் சூழல் நிலவுகிறது.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 14 ஆண்டுகளாக சேலம் மொத்தச் சந்தைகளில் நிலவிய விலை பற்றி ஆய்வு மேற்கொண்டது. அதன்படி, வரும் நவம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை மரவள்ளிக் கிழங்கிற்கு விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 11 முதல் ரூ. 12 வரை விலை கிடைக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே அறுவடை செய்த மரவள்ளிக் கிழங்கை உடனே விவசாயிகள் விற்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## திருப்பூர் மாவட்டத்தில் 105.10 மி.மீ. மழை பதிவு

திருப்பூர், அக். 23: மாவட்டத்தில் 105.10 மி.மீ. மழை வியாழக்கிழமை பதிவாகியுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில், பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் கனமழை பெய்துள்ளது. மாவட்டத்தில் பெய்துள்ள மழை அளவு (மில்லி மீட்டரில்) வருமாறு:

அவிநாசியில் 80.00, திருப்பூரில் 14.10, பல்லடத்தில் 5.00, தாராபுரத்தில் 6.00. மாவட்டத்தில் மொத்தமாக 105.10 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. சராசரி மழை அளவு 15.01 மி.மீ.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.02, சென்னையில் ரூ.3.37.

கறிக்கோழிவிலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.86, முட்டைக்கோழி கிலோ ரூ.63.

## நாகை மாவட்டத்தில் நீடிக்கிறது மழை

நாகை மாவட்டத்தில் மழை சீற்றம் குறைந்திருந்தாலும், தொடர்ந்து மழை நீடித்து வருகிறது. நாகை மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தீவிரமடைந்த மழை சீற்றம் திங்கள்கிழமை வரை நீடித்தது. செவ்வாய்க்கிழமை முதல் மழை சீற்றம் குறைந்திருந்தாலும், தொடர்ந்து மழை நீடித்து வருகிறது. வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக சீர்காழியில் 61.8 மழை பதிவானது. மற்றப் பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்):

தரங்கம்பாடி- 21, தலைஞாயிறு- 20, மணல்மேடு- 17, மயிலாடுதுறை- 15.6, நாகப்பட்டினம்- 14.6, கொள்ளிடம்- 13.5, வேதாரண்யம்- 11.2.

நாகை மாவட்டம், சீர்காழி உள்ளிட்ட சில பகுதிகளில், தாழ்வான இடங்களில் உள்ள விளைநிலங்கள் நீரில் மூழ்கின. காவிரியின் கடைமடை மாவட்டமான நாகை மாவட்டத்தில் மழை சீற்றம் குறைந்திருந்தாலும், ஆறுகளில் நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் வெள்ளம் ஏற்படும் அபாயமும் உள்ளது.

## விசுவக்குடி நீர்த்தேக்கத் திட்டத்தை விரிவுபடுத்த ரூ. 3.30 கோடி ஒதுக்கீடு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், விசுவக்குடி நீர்த்தேக்கத்தில் அதிகளவு மழைநீரை தேக்கி வைக்கவும், அதன் ஆழத்தை விரிவுப்படுத்தவும் ரூ. 3.30 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்கு தலைமை வகித்து, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளித்த அவர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் அக்டோபரில் சராசரியாக பெய்ய வேண்டிய மழையளவு 173 மில்லி மீட்டராகும். 21.10.2014 வரை 109.9 மி.மீ., மழை பெய்துள்ளது. ஜனவரி முதல் அக்டோபர் வரை சராசரியாக பெய்ய வேண்டிய மழையளவு 568 மி.மீ., நிகழாண்டு 583.20 மி.மீ., மழை பெய்துள்ளது. தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி மக்காச்சோளத்தில் ஒரு ஹெக்டரில் ரூ. 1 லட்சம் வருமானம் ஈட்டுவதற்கும், பருத்தியில் ஒரு ஹெக்டரில் ரூ. 1.25 லட்சம் வருமானம் ஈட்டுவதற்கும் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தில் இணைந்து இலக்கை அடையவேண்டும். தற்போது 223

ஹெக்டேர் பரப்பளவில் நெல், 4,702 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு, 1,298 ஹெக்டேர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள், 36,347 ஹெக்டடேர் பரப்பளவில் பருத்தி, 20,198 ஹெக்டேர் பரப்பளவில் தானியப் பயிர்கள், 693 ஹெக்டேர் பரப்பளவில் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையில் 61.2 மெ.டன் நெல், 4.3 மெ.டன் நிலக்கடலை, 2.3 மெ.டன் பயறுவகை பயிர்கள் உள்ளிட்ட விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் உரக்கடைகளில் போதுமான அளவில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 261 மெ.டன் யூரியா இருப்பில் உள்ளது. 1,021 மெ.டன் தேவைப்பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறை கீழ் உள்ள அனைத்து ஏரிகளையும் அளவீடு செய்து, 6 மாத காலத்துக்குள் வரத்து வாய்க்கால்கள் சீரமைக்கப்படும். மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தின் மூலம் பின்தங்கிய வேப்பூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தில் 189 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விசுவக்குடி நீர்த்தேக்கத் திட்டத்தில், நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தி அதிகப்படுத்த ரூ. 3.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் தரேஸ் அஹமது. கூட்டத்தில், வேளாண் இணை இயக்குநர் வே. அழகிரிசாமி, வேளாண் துணை இயக்குநர் இரா. கனகசபை, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) செ. சுப்பிரமணியன், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) மா. இந்திரா, கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் முத்துகுமாரசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

**<u>நிரம்பிய தடுப்பணைகள்: கடலூரில் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு</u>**

கடலூர் அருகே உள்ள இரண்டு தடுப்பணைகளும் நிரம்பியுள்ளதால், கடலூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டம், மையனூர் வனப்பகுதியில் உள்ள

கருடாழ்வார் மலையிலிருந்து உருவாகும் கெடிலம் ஆறு பல ஊர்களை கடந்து இறுதியாக, கடலூரில் உள்ள வங்கக் கடலில் கலக்கிறது. விழுப்புரம் மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யாததால் ஆற்றில் தண்ணீர் வரத்து இல்லை. கடலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக கடலூர் பகுதியில் கடந்த 7 நாட்களில் 23 செ.மீ மழை கொட்டியுள்ளது. விலங்கல்பட்டு மற்றும் திருவந்திபுரம் மலையிலிருந்து பெருக்கெடுத்து வரும் மழை நீர் கெடிலம் ஆற்றுக்கு வந்துக் கொண்டிருப்பதால், 6 அடி உயரம் உள்ள திருவந்திபுரம் அணைக்கட்டு நிரம்பி வழிந்தோடுகிறது. செவ்வாய்க் கிழமை காலை நிலவரப்படி இங்கு சுமார் 700 கனஅடி அளவு நீர் வழிந்தோடுகிறது. இந்த நீர், கூத்தப்பாக்கம் அணைக்கட்டு வழியாக கெடிலம் ஆற்றில் வழிந்தோடுகிறது. திருவந்திபுரம் தடுப்பணை மற்றும் கூத்தப்பாக்கம் அணைக்கட்டுகள் நிரம்பி மழை நீர் தேங்கியுள்ளதால், கடலூர் சுற்று வட்டார பகுதிகளில் நிலத்தடி நீர் வெகுவாக உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

கர்நாடகத்தில் வியாழக்கிழமை தொடங்கி அடுத்த 72 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து பெங்களூரு வானிலை மையம் வெளியிட்டசெய்திக்குறிப்பு:

அரபிக் கடலின் தென் கிழக்கு பகுதி, அதன் சுற்றுவட்டாரத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைந்து நிலைகொண்டுள்ளது. இது தென் கிழக்கு, கிழக்கு மத்தியப் பகுதிக்கு நகர்ந்து வருகிறது. அடுத்த 24 மணி நேரத்தில் இது தீவிரமடைந்து, வட மேற்கு பகுதியில் நகர்ந்து சூறாவளிப் புயல் காற்றாக உருவெடுக்கும். வியாழக்கிழமை காலை கடலோர கர்நாடகம், தென் கர்நாடகம், வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில்

மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் பெங்களூரு மாநகரம், நெலமங்களாவில் தலா 20 மி.மீட்டர், பாண்டவபுரா, நாகமங்களா, மளவள்ளி, ஹெசரகட்டா, திப்பேகொண்டனஹள்ளி, மாதவரா, ஹொஸ்கோடே, குனிகல் ஆகிய பகுதிகளில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவாகின. வானிலை முன்னறிவிப்பு அடுத்த 72 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளிலும் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் மிதமானது முதல் பலத்த மழை பெய்யக்கூடும். அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் மிதமானது முதல் பலத்த மழையும், வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

பெங்களூருவில்மழை

அடுத்த 24 மணி நேரத்தில் பெங்களூருவில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மட்டும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இந்த சமயத்தில் பெங்களூருவின் தட்பவெப்பம் அதிகபட்சமாக 28 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்சமாக 19 டிகிரி செல்சியசாகவும் காணப்படும். கடந்த அக்.1-ஆம் தேதி முதல் பெங்களூருவில் பெய்த மழையின் அளவு 238 மி.மீட்டராக பதிவாகியுள்ளது. இது வழக்கத்தை விட 97 மி.மீட்டர்

குறைவாகும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

**மக்களைத்தேடி... காய்கறி சாகுபடியாளர்கள்! உழவர் சந்தைகளில் நேரடி விற்பனை**



கோவை : கோவையில்,'பந்தல் காய்கறி சாகுபடியாளர்கள் நிறுவனம்' எனும் அமைப்பை துவங்கியுள்ள விவசாயிகள், உழவர் சந்தைகளில் நேரடியாக பொதுமக்களுக்கு காய்கறி விற்பனையை துவக்குகின்றனர். கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. கிணத்துக்கடவு, மதுக்கரை, தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் பாசனத்துக்கும், கால்நடைகளுக்கும் நீரின்றி விலைகொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை சரிகட்டும் வகையில் விவசாயிகள் இருக்கும் நீரை சிக்கனப்படுத்தியும், விலைக்கு வாங்கியும் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் அளவில் விவசாயம் மேற்கொண்டுள்ளனர். பாசன வசதியில்லாத பகுதிகளில் பந்தல் காய்கறி சாகுபடி நடக்கிறது. தற்போது பாசன வசதியுள்ள விவசாயிகளும் லாபம் கருதி, பந்தல் சாகுபடியை துவக்கி,சொட்டு நீர் பாசனத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். இன்றைய நிலையில் பந்தல் சாகுபடியாளர்கள் தான் விவசாயத்தில் வெற்றியாளர்களாக காணப்படுகின்றனர். பாகற்காய், பீர்க்கங்காய், புடலை, சுரைக்காய் உள்ளிட்ட காய்களை சத்துள்ளதாகவும், அளவில்

பெரியதாகவும் வளர்த்து விற்பனை செய்கின்றனர்.கோவை மாவட்டத்தில், மேற்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தொண்டாமுத்தூர் முதல் ஆனைமலை வரையில் உள்ள விவசாயிகள் ஒருங்கிணைந்து பந்தல் காய்கறி சாகுபடியாளர் சங்கம் ஏற்படுத்தினர். இதில் 600 விவசாயிகள் நேரடி உறுப்பினர்களாக உள்ளனர். சமீபத்தில், இவ்விவசாயிகள் ஒன்றிணைந்து 'கோவை பார்மர்ஸ் புரட்யூசர் கம்பெனி லிமிடெட்' எனும் அமைப்பை துவக்கினர். இந்நிறுவனம் வியாபாரிகளை வரவழைத்து, காய்கறிகளுக்கு விலை நிர்ணயிக்கின்றனர். இதனால், மாவட்டம் முழுவதிலும் விவசாயிகளிடம் இருந்து ஒரே மாதிரி விலைக்கு காய்கறிகளை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். விலைகுறித்த தகவல் எஸ்.எம்.எஸ்., மூலம் தினமும் அனைத்து விவசாயிகளுக்கும் அனுப்பப்படுகிறது. இதனால் யாருக்கும் ஏமாற்றம் ஏற்படுவதில்லை. அதேபோல், வியாபாரிகளே விவசாயிகளின் தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று காய்கறிகளை கொள்முதல் செய்கின்றனர். பறிக்கவும் ஆட்களை நியமித்துக் கொள்கின்றனர். ஆனாலும், செடி - கொடிகளுக்கு சேதம் விளைவிக்காமல் விவசாயிகள் நேரடியாக கண்காணிப்பை மேற்கொள்கின்றனர். இவ்வமைப்பின் தலைவர் மோகன்ராஜ், செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் கூறுகையில்,"பந்தல் காய்கறி சாகுபடியை 15 ஆண்டுகளாக மேற்கொண்டுள்ளோம். இத்தொழில், விவசாயிகளுக்கு லாபகரமாகவே உள்ளது. சுத்தமான, பச்சை காய்களை அன்றாடம் பொதுமக்களுக்கு தருகிறோம். ஆனாலும், இடையில் வியாபாரிகள் இருப்பதால், விவசாயிகளான எங்களுக்கு கிடைக்கும் விலையை விட, இரண்டு மடங்கு கூடுதல் விலை கொடுத்தே பொதுமக்கள் வாங்குகின்றனர். இடையில் இருக்கும் வியாபாரிகள் கூடுதல் லாபம் பெறுகின்றனர். இதை தவிர்க்க, விவசாயிகளே நேரடியாக காய்கறிகளை உழவர் சந்தை விற்பனையில் இறங்க முடிவு செய்துள்ளோம். கோவையில் சிங்காநல்லூர், வடகோவை, வடவள்ளி

உழவர் சந்தைகளில் கடை ஒதுக்கீடு பெற்றுள்ளோம். இதனால் ஆண்டு முழுவதும் நல்ல காய்கறிகள் உடனுக்குடன் பொதுமக்களுக்கு கிடைக்கும்," என்றனர்.

**"மல்லிகை சாகுபடியில் மனம்போல வருமானம்'**



இருபோக நஞ்சை நிலத்தில் கரும்பு, நெல், வாழை பயிரிட்டு கிடைக்காத லாபம், மணக்கும் மல்லிகையை பயிரிட்டதால் கிடைக்கிறது என்கிறார் மதுரை விவசாயி ரங்கநாதன். மதுரை மஞ்சம்பட்டியில், கண்மாய் அருகே இவரது நஞ்சை நிலம் உள்ளது. பெரியாறு பாசன கால்வாயில் தண்ணீர் வரும்போது, தண்ணீர் கசியும் இருபோக சாகுபடி பகுதி என்பதால் நெல், கரும்பு, வாழை பயிரிட்டு வந்தார் ரங்கநாதன். இந்நிலத்தில் மல்லிகை பயிரிட்டால் என்ன என்று தூண்டினார் அவரது மனைவி. திருச்சியில் அவர்களது நிலத்தில் செய்த சாகுபடியை இங்கு செய்து பார்க்கலாம் என ரங்கநாதனுக்கும் தோன்றியது. இதையடுத்து பரீட்சார்த்தமாக 50 சென்ட் நிலத்தில் மல்லிகை சாகுபடி செய்தார். நஞ்சை நிலம். அதிலும் கண்மாய் அருகே தலைமடை பகுதியில் உள்ளது. எனவே பெரியாறு பிரதான கால்வாய் நிலத்தருகே செல்கிறது. மல்லிகைக்கு அதிக தண்ணீர் தேவையில்லை. எனவே, பெரியாறு பிரதான கால்வாயில் கான்கிரீட் சுவர் எழுப்பி, நீர்க்கசிவை தடுத்தார். மல்லிகை சாகுபடியை துவக்கினார். இனி, அதன் பலனை அவரே கூறுகிறார்: மல்லிகை சாகுபடியால் இப்போது மும்மடங்கு லாபம் பெறுகிறேன். தினமும் 200 கிலோ வரை மல்லிகை கிடைக்கிறது. மாதம் ஒரு டன் கிடைக்கும். இதனால் அரை ஏக்கர் சாகுபடியை 5 ஏக்கராக விரிவு படுத்தினேன். ஆண்டுக்கு ரூ.12 முதல் ரூ.15 லட்சம் வரை கிடைக்கிறது. அதேசமயம் நெல் சாகுபடியில் ஒரு ஏக்கரில் 3 மாதத்திற்கு ஒருமுறை ரூ. 20 ஆயிரம் வரையே

கிடைத்தது. கரும்பு எனில் நெல்லைவிட சற்று கூடுதலாக ரூ. 20 ஆயிரம் கிடைக்கும். மல்லிகை சாகுபடி மிகுந்த லாபம் தருகிறது. அதனால் ஒருபோதும் விவசாயத்தில் நஷ்டம் என்று நான் கூறவே மாட்டேன். மல்லிகைக்கு முறையான பராமரிப்பு அவசியம். அதற்கான தொழில்நுட்பத்தை "அட்மா' திட்ட அதிகாரிகள் வழங்கினர். இவ்வாறு அவர் கூறினார். மல்லிகை பயிரிட்டபின், தினமும் 100 பேர் வரை அவரிடம் பணியாற்றுகின்றனர். காலையில் பணியாற்றுவோர், பின் நூறுநாள் பணிக்கும் சென்றுவிடுவதால், இரட்டை சம்பளம் கிடைக்கிறது. அவர்களை தாராளமாக கவனிப்பதால், தொழிலாளர் பற்றாக்குறை இவருக்கு ஏற்படுவது இல்லை. இவரை தொடர்பு கொள்ள 90957 28851. **-ஜி.மனோகரன், மதுரை.**

***<u>சின்ன சின்ன செய்திகள்</u>***



**குடம்புளி** : உலக வர்த்தக அரங்கில் முதல் முறையாக குடம்புளி (KOKUM) வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் குடம்புளியை சான்ட் (SANT) என்று குறிப்பிடுகின்றனர். இது Santulan என்பதன் சுருக்கமாகும். குடம்புளியின் முக்கிய குணம் சமப்படுத்துவதாகும். DO IT YOURSELF என்ற பெயரில் அறிமுகமாகின்ற இந்த பானம் இரசாயனகலப்பற்றதும், தயாரிப்பதற்கு மிக எளிதானதுமாகும். மேற்கு தொடர்ச்சி மலைக்கு சொந்தமான இந்த பழம் மருத்துவ குணமுடையது. இது உடலில் கொழுப்புச்சத்தை சேர விடாது. உடல் பருமனைத் தடுக்கும். குடம்புளியில் ஆக்சிஜன் சிதைவதைத் தடுக்கும் இரண்டு காரணிகளை "கார்சினோல்' மற்றும் சாந்தோனெஸ் ஆகியவை உள்ளது. இதில் கார்சினோல் மற்றும் சாந்தோனெஸ் ஆகியவை உள்ளது. இதில் கார்சினோல் புற்று நோயைத் தடுக்கும் தன்மையும், ஜீரண சக்தியைத் தூண்டும் திறமையும் கொண்டது.

சாந்தோனெஸ் இதயத்தை வலுப்படுத்தும் வேலையைச் செய்கிறது. கொங்கன் மற்றும் கர்நாடகத்தில் உத்ர கன்னடா பகுதியில் அதிக அளவில் விளைகிறது. கொங்கன் பகுதியில் மட்டும் சுமார் 1000 எக்டரில் குடம்புளி பயிராகி வருகிறது. குடம்புளியின் அறுவடைக்காலம் மே - ஜூன் மாதத்தில் பருவமழை பெய்து வருவதால் இதனைப் பக்குவமாக அறுவடை செய்து சேகரித்து வைத்து பதப்படுத்தி பயன்படுத்துவதற்கு பல பிரச்னைகள் உள்ளன. THE WESTERN GHATS KOKUM FOUNATION (WGKF) எனும் தன்னார்வ நிறுவனம் 2001 முதல் உலக அளவில் குடம்புளியின் சிறப்பை வெளிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதுவரை மூன்று சர்வதேச கருத்தரங்குகளை நடத்தியும், குடம்புளி தொடர்பான புத்தகத்தை வெளியிட்டும் உள்ளது. கேரளத்தில் காசர்கோட்டிலுள்ள டாக்டர் டி.சந்திர சேகர் சௌட்டி கூறும்போது, குடம்புளி விவசாயியான நான், குடம்புளி ஜூஸ் பருகத் தொடங்கியது முதல் என்னுடைய ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது என்கிறார். கேரளத்தில் மீன் குழம்பு செய்யும் போது இது முக்கிய சேர்மானமாக இன்றும் பயன்படுத்தப்படுகிறது. (தகவல் : ஆங்கிலத்தில் ஸ்ரீபத்மா, காசர் கோடு- தமிழில் எஸ்.பழனிச்சாமி (போடி சிவாஜி) ஸ்பைசஸ் இந்தியா, ஆகஸ்ட் 2014, செல் : 095667 99911)

<u>**மானாவாரி நெல்லியில் நிலப்போர்வை மூலம் மகசூலை அதிகரித்தல்**</u> : மானாவாரி பெருநெல்லி சாகுபடி முறையில் பழமரப்பயிரின் தண்டுப்பகுதியை நோண்டு அமைக்கப்பட்ட 5 சதம் சரிவுடன் கூடிய வட்டக் குழிகளில் 500 காஜ் தடிமனுடைய கருப்புநிற பாலிதீன் விரிப்புகளை நிலப்போர்வையாக அமைக்கும் பொழுது 32.2 சதம் கூடுதலாக மகசூல் கிடைத்துள்ளது. மேலும் வறட்சியைத் தாங்கும் பயிர் வினையியல் காரணிகளான இலைநீரின் அளவு, பச்சையம் தாங்கும் திறன், புரோலின் புரதம் நைட்ரேட் ரிடக்டேஸ் நொதிகளின் செயல்பாடு ஆகியவை அதிகரித்து காணப்பட்டது. பாலிதீன் விரிப்பின் விலை

ரூ.160. மகசூல் - நிலப்போர்வை அமைக்கப்பெறாத சாதாரண முறை - 14.5 கிலோ / மரம் / வருடம் நிலப்போர்வை அடைத்துப்பெற்ற மகசூல் - 18.9 கிலோ / மரம் / வருடம் தகவல் : மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை. ஏ.பி.கே.1 சீத்தா : இந்த சீத்தாப்பழ மரத்தின் சிறப்பியல்புகள் வறட்சியைத் தாங்கி வளரும். நடுத்தர மற்றும் இதய வடிவம் கொண்ட பழங்கள், மகசூல் - 15 கிலோ / மரம், பழ எண்ணிக்கை 72 / மரம், பழ எடை 208 கிராம் / பழம். மொத்த கரையும் சர்க்கரை அளவு- 24.5 டிகிரி பிரிக்ஸ். தகவல்: மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை.

**கத்திரியில் ஊடுபயிர் :** கத்திரி ஒரு பிரச்னையான பயிர் நன்கு சொத்தை இல்லாமல் விளைவித்தால் நல்ல இலாபம் உண்டு. கத்திரியை பூச்சி தாக்குவது போல் வேறு எந்த பயிரையும் தாக்குவதில்லை. இதனைக் கட்டுப்படுத்த சூரியகாந்தி, உளுந்து, காராமணி, பாசிப்பயிர் ஊடுபயிராகச் செய்யலாம். 5 வரிசை கத்திரிக்கு இவற்றுள் ஒன்றை ஒரு வரிசையாக நடவேண்டும். பூச்சி தாக்குதல் குறையும். **முட்டைகோஸ் :** செடிகளை வைர முறுகு அந்து பூச்சி அதிகம் தாக்கும். 25 வரிசைக்கு 2 வரிசை கடுகுச் செடியைப் பயிரிட்டால் அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்க முடியும். **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>பெரிய வெங்காயம் சாகுபடிக்கு உதவிகள்</u>



உடுமலை வட்டாரத்தில் பெரிய வெங்காயம் சாகுபடியை மேற்கொள்ள புதிய பரப்பு அதிகரித்திட நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு எக்டருக்கு ஆகும் சாகுபடி செலவான ரூ.12,000 மான்யமாக தர உள்ளது. தோட்டக்கலைத்துறை விலை வீழ்ச்சி இல்லாத காய்கறி வரிசையில் ஓரளவு நல்ல விலை தர உதவும் பெரிய வெங்காயம் ஒரு காலத்தில்

சாகுபடியில் உள்ள பயிர் தான். எங்கெல்லாம் வெங்காயம் விளைகிறதோ அங்கு இந்த வெங்காயம் ஏன்? வெள்ளை வெங்காயம் கூட சாகுபடி செய்யலாம். மருத்துவ குணம் மிகுந்தது வெள்ளை வெங்காயம். புதுப்புது உத்திகளால் தான் விவசாயிகள் வருமானம் அதிகரிக்கும். இதற்கு தன் சாகுபடி பரப்பில் ஒரு பகுதியை பெரிய வெங்காயத்துக்கு, ஒதுக்கி ஊடுபயிராக வெண்டை, முள்ளங்கி, கீரை வகைகளை நட்டு வரவினை அதிகரித்து ஒரு எக்டரில் 16 டன் வெங்காயம் வரை விவசாயிகள் பெற்றுள்ளனர். உடுமலையில் பெரிய வெங்காயம் சாகுபடி செய்திட விரும்பும் விவசாயிகள் தனது பெயரை பதிவு செய்யலாம். வயது அதிகம் உள்ளது என்று தவறான கற்பனை செய்யாமல் இடைவெளியை அதிகரித்து இதர காய்கறிப் பயிர்கள் பொரியல் தட்டை, குத்து அவரை, கொத்தவரை, வெண்டை, பீட்ரூட் மற்றும் கீரை வகைகள் கலந்து அல்லது ஊடு பயிராக தென்னந்தோப்பில் கூட பெரிய வெங்காயம் சாகுபடி முறையாக மேற்கொள்ளலாம். ஊடுபயிராக இதர பயிர்களின் இடைவெளியில் வெங்காயம் சாகுபடி மூலம் பலவித பூச்சிகள் பெருகாமல் தடுக்கலாம். முதலில் கூடுதலாக முதலீடு செய்து உயிர் உரங்கள் மண்புழு உரம் முதலியன இட்டு மண்ணைப்பேணி தரமான மதிப்பு அதிகம் உடைய (இயற்கை விவசாய உத்திகள் மூலம்) காய்கறி உற்பத்திக்கு தற்போது தோட்டக்கலைத்துறை உதவி வருகிறது. ஒருங்கிணைந்த உர உபயோகம் மான்யமாக ரூ.1200 வழங்கி அதற்கு இடு பொருட்களான பாஸ்போ பேக்டீரியா, அசோஸ் பைரில்லம் தரப்படும். இயற்கை விவசாயிகள் பதிவு செய்திட விரும்புபவர்கள் குழுக்களாக பதிவு செய்தால் அநேக சலுகைகள் காத்திருப்பதும் விளைபொருளை சிறப்பு விலைக்கும் விற்கலாம். வங்கிகளில் கடன்பெற்று கால்நடை செல்வங்களையும் அதிகரித்து வேலிகளில் லாபம் தரும் பலா, மா, கொய்யா, இலவன், புளி, நாவல், முள் இல்லா மூங்கில் முதலிய மரங்கள் நட்டு நல்ல காசு பார்க்கலாம். மேலும் விவரம் பெற

98420 07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
**- டாக்டர்பா.இளங்கோவன், கோவை-641 041.**

## தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

காஞ்சிபுரம் : காஞ்சிபுரத்தில், நேற்று காலை, மீண்டும் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழை துவங்கியதால், கடந்த நான்கு நாட்களாக, காஞ்சிபுரத்தில், மழை விட்டு விட்டு பெய்து வருகிறது.நேற்று காலை 10:30 மணியளவில் காஞ்சிபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இருந்தாலும், கன மழை பெய்யாததால், குளம், குட்டைகள் நிரம்பாத நிலையில் உள்ளன.இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து விட்டதால், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாயிகள் வேறு தொழிலுக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்த ஆண்டு பருவ மழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள், நாற்று விட ஆரம்பித்து விட்டனர்.இந்த பருவ மழை, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் ஏரிகளுக்கு தண்ணீர் வர வாய்ப்பு உள்ளது. ஏரிகளுக்கு தண்ணீர் வந்தால், கிணற்று நீர் மட்டமும் உயரும். இந்த ஆண்டு பருவ மழை விவசாயிகளுக்கு நல்ல பலனை கொடுக்கும் என, விவசாயிகள் கருதுகின்றனர்.

## தர்மபுரியில் மழையால் கம்பு சாகுபடி அதிகரிப்பு

தர்மபுரி: மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக, கம்பு சாகுபடி அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில், விவசாயிகள் கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட சிறு தானிய பயிர்களை, ஆண்டு முழுவதும் மானாவாரியாகவும், இறவை பாசனத்திலும், சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக, பென்னாகரம் பகுதியில், விவசாயிகள் கம்பு சாகுபடியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு

வருகின்றனர். மாவட்டத்தில் கோடை மழையை எதிர்பார்த்து, பென்னாகரம் பகுதியில் அதிகளவிலான விசாயிகள், கம்பு சாகுபடியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், மாவட்டத்தில் கோடை கால துவக்கத்தில், விவசாயிகள் எதிர்பார்த்த, கோடை மழை பெய்யவில்லை. இதனால், கம்பு கதிர் விடும் நேரங்களில், போதிய பாசன வசதியின்றி, கதிர்களில் பால் விடுவது குறைந்து காணப்பட்டது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சில தினங்களாக பெய்து வரும், மழையின் காரணமாக, கம்பு உள்ளிட்ட விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களுக்கு பாசன வசதி கிடைத்தது. குறிப்பாக, மழையின் காரணமாக, கம்பு பயிர் நன்கு கதிர் விட்டு வளர்ந்துள்ளது. கம்புக்கு தேவையான பாசன வசதி கிடைக்க வாய்ப்புள்ளதால், அதிகளவிலான விவசாயிகள் கம்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.மேலும், கம்புக்கு சந்தையில், நல்ல விலை கிடைத்து வருவதுடன், கால்நடை தீவனத்துக்கு பயன்படும் கம்பந்தட்டைகளும் நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>மருத்துவ குணம் வாய்ந்த களாக்காய்விளைச்சல் குறைவால் விலை உயர்வு</u>

ஆத்தூர் :ஆத்தூர் அருகே, கல்வராயன் மலை பகுதிகளில், களாக்காய் விளைச்சல் குறைந்ததால், கிலோ, 60 ரூபாய் வரை, விலை உயர்ந்துள்ளது.சேலம், தர்மபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய நான்கு மாவட்டத்தின் எல்லையாக, கல்வராயன் மலை உள்ளது. அதன்படி, ஆத்தூர் வனக்கோட்டத்தில், ஆத்தூர், வாழப்பாடி, கல்வராயன்மலை, தம்மம்பட்டி என, ஆறு வனச்சரகம் உள்ளது. அதில் கல்வராயன்மலை, பச்சமலை, நெய்யமலை, மண்மலை, நாகலூர் என, 610 சதுர கி.மீ., வனப்பரப்பு கொண்டுள்ளது.கல்வராயன்மலையில், அரியவகை மூலிகை செடிகளும், காய், கனிகளும் விளைந்து

காணப்படுகின்றன. அதில், குறிப்பாக, ஆகஸ்ட் மாதத்தில், களாக்காய் விளைச்சல் அறுவடை துவங்கி, செப்டம்பர், அக்டோபர் வரை, விற்பனை இருக்கும். அறுவடை செய்யும் களாக்காய்களை, ஆத்தூர், தலைவாசல், வாழப்பாடி பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. புளிப்பு, இனிப்பு கலந்த சுவை கொண்ட களாக்காய்களில், இரும்பு, தாது சத்துகள் இருப்பதால், ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய் மருத்துவத்துக்கு பயன்படுகிறது. தவிர, கிராமப் பகுதிகளில், உடல் ஆரோக்கியத்துக்காக, களாக்காய் ஊறுகாய் போட்டு சாப்பிட்டு வருகின்றனர். பெரிய, சின்னக்கல்வராயன் மலைகளில், அதிகளவில் இருந்த களாக்காய் செடிகள், பருவ மழையின்றி வறட்சி நீடித்ததால், அச்செடிகள் பெரும்பாலும் அழிந்து விட்டது.இந்தாண்டு களாக்காய் விளைச்சல் குறைந்துள்ளதால், விற்பனைக்கு குறைவாக வருகிறது. அதனால், கிலோ, 50 முதல், 60 ரூபாய் வரை, விலை உயர்ந்துள்ளது. இயற்கை மருத்துவ குணத்துக்கு பயன்படுவதால், கூடுதல் விலையாக இருந்தாலும், பொதுமக்கள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.இதுகுறித்து, ஆத்தூரை சேர்ந்த, களாக்காய் விற்பனையாளர்கள் கூறியதாவது:ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய்களுக்கு அருமருந்தாக இருக்கும் களாக்காய் செடிகள் அழிந்ததால், அரிதாக உள்ள செடிகளில், குறைந்தளவில் காய் பிடிப்பு உள்ளது.கடந்தாண்டு விளைச்சல் கணிசமாக இருந்ததால், கிலோ, 20 முதல், 30 ரூபாய் வரை விற்பனையானது. இந்தாண்டு விளைச்சல் குறைந்ததால், கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வனப்பயிர்களில் ஒன்றாக உள்ள களாக்காய், நகர் புறத்தில் உள்ளவர்கள், ஊறுகாய்களுக்கு பயன்படுத்துகின்றனர். களாக்காய் செடிகள் அழிந்து வருவதால், அரிதான பயிராக மாறி வருகிறது. அதனால், வனப்பகுதிக்குள் களாக்காய் செடிகளை புதிதாக நடவு செய்து பராமரிக்க, வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

**சேலம் மாவட்டத்தில் தொடர் மழைமேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு**

சேலம்: சேலம் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம், 91 அடியாக உயர்ந்துள்ளது.தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால், ஏரி, குளம் உள்ளிட்டவற்றின் நீர், நிலைகள் உயர்ந்து வருகிறது.மேட்டூர் அணையின் நீர்மட்டமும் வெகுவாக உயர்ந்து வருகிறது. டெல்டா மாவட்டங்களிலும் கன மழை பெய்து வருவதால், அங்கு தண்ணீர் தேவை குறைந்துள்ளது.இதனால், மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு, 500 கன அடி தண்ணீர் மட்டுமே திறந்து விடப்படுகிறது. அணைக்கு வரும் தண்ணீரின் அளவை காட்டிலும், குறைந்த அளவு தண்ணீரே திறந்துவிடப்படுவதால், நீர்மட்டம் அதிகளவு உள்ளது. கடந்த அக்., 20ம் தேதி, 88 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், கடந்த, 5 நாளில், 3 அடி உயர்ந்துள்ளது.நேற்று காலை அணையின் நீர்மட்டம், 91.140 கன அடியாக இருந்தது. நீரின் கொள்ளவு, 53.936 டி.எம்.சி., நீர் வரத்து, 10 ஆயிரத்து, 60 கன அடியாக இருந்தது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் அதிகரித்து வருவது, விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ஈரோட்டில் பெய்த கன மழைஓடைகளில் பெருக்கெடுத்த நீர்**

ஈரோடு :ஈரோட்டில் பெய்த கன மழையால், ஓடைகளில் நீர் பெருக்கெடுத்தது.ஈரோடு மட்டுமின்றி, சுற்றுப்புற பகுதிகளிலும் நேற்று மதியம், 12 மணி முதல் மாலை, ஆறு மணி வரை கன மழை கொட்டி தீர்த்தது. இதனால், பெரிய சடையம்பாளையம் குளம் நிரம்பி, உபரி நீர் வெளியேறியது.முறையான வசதி இல்லாததால், ஈரோடு-சென்னிமலை ரோட்டிலுள்ள கே.கே. நகர் பாலத்தில், டூவீலர்கள், கார்கள், ஆட்டோ உள்ளிட்ட வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு தண்ணீர் பெருக்கெடுத்தது. சூரம்பட்டி அணைகட்டு நிரம்பி, மழை நீர்

வெளியேறியது. காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்ததால், ஆகாய தாமரைகள் நீரில் அடித்து செல்லப்பட்டன. இதே போல் கனிராவுத்தர் குளமும் நிரம்பி, உபரி நீர், பிச்சைக்காரன்பள்ளம் ஓடைக்கு செல்கிறது. மழை நீர் செல்லும் வழியில், ஆக்கிரமிப்புகள் இருந்ததால், சூளை, பாரதி நகரில் உள்ள, எட்டுக்கும் மேற்பட்ட வீடுகளில், மழை நீர் புகுந்தது. இதில், மூன்று வீடுகளில், சுவர் விழுந்தது. மற்றொரு ஓலைக்குடிசையும் சேதமடைந்தது.மழை நீர் புகுந்ததால், ஆக்கிரமிப்புக்களை அகற்றக்கோரி, பொதுமக்கள் சாலை மறியல் செய்ய முயன்றனர். போலீஸார், வருவாய்த்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி, மறியலை கைவிட செய்தனர். பின், ஆக்கிரமிப்புக்களை அகற்றும் பணியை துவக்கினர்தாழ்வான பல பகுதிகளிலும், மழை நீர் சூழ்ந்தது. ஓடைகள், நீர் நிலைகளில் கரைபுரண்டு மழை நீர் சென்றது. மழை நின்ற பின், அதிகரித்துள்ள நீரோட்டத்தை பொதுமக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர்.நல்லியம்பாளையம் பகுதி ஓடையில் நீர் செல்வதற்காக அமைக்கப்பட்டு இருந்த ராட்சத குழாயில் அடைப்பு ஏற்பட்டது. அதனை சரிசெய்ய சென்ற நபர், திடீரென நீரில் விழுந்து தத்தளித்தார். அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்டனர்.மழை நின்ற பின், மழை நீர் மெல்ல வடிந்தது. அதன் பின்னரே இயல்பு நிலை திரும்பியது. மழையால், பல இடங்களில் மதியம், 12 மணி முதல் மாலை மணி வரை போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**<u>மழைக்கால மடிவீக்க நோய்கால்நடை துறை யோசனை</u>**

ஈரோடு :மழைக்காலத்தில் வரும் மடிவீக்க நோயை கட்டுப்படுத்த, கால்நடைகளை சுத்தமாக பராமரிக்க வேண்டும், என, கால்நடைத்துறை அறிவுறுத்தி உள்ளது.கால்நடைகளை அச்சுறுத்தும், கோமாரி நோயை கட்டுப்படுத்த, ஆண்டுக்கு இரண்டு முறை கோமாரி தடுப்பூசி போடப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில், இந்தாண்டு, மூன்று லட்சத்து, 69 ஆயிரத்து, 650 கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி பணிகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், சில விவசாயிகள், போதிய விழிப்புணர்வு இல்லாததால், சினை மாட்டுக்கு ஊசி போட்டால், கன்று ஈன்றுவதில் பிரச்னை ஏற்படும் என நினைத்து, ஊசி போடாமல் இருந்து விடுகின்றனர். இதனால், கடந்தாண்டு, ஈரோடு மாவட்டத்தில் கோமாரி நோய்க்கு நூற்றுக்கணக்கான மாடுகள் பலியாகின. இந்தாண்டு விவசாயிகளிடையே அதிகளவில், விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டத்தில், 100 சதவீதம் ஊசி போடப்பட்டுள்ளதாக, கால்நடைத்துறை அறிவித்துள்ளது. தற்போது, மழை காலம் துவங்கி உள்ள நிலையில், நோய் தாக்கத்தை தவிர்க்க, மாட்டுக்கொட்டகை, மாடுகளை சுத்தமாக பராமரிக்க வேண்டும். இதுகுறித்து, கால்நடைத்துறை இணை இயக்குனர் ஜெயராமன் கூறியதாவது: தற்போது, வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதால், மாடுகளுக்கு மடிவீக்க நோய் வருவதை தவிர்க்க, கால்நடைகளின் காம்பு, மடி ஆகியவற்றை அடிக்கடி, சுத்தம் செய்து, முறையாக பராமரிக்க வேண்டும். மழை காலங்களில், கால்நடையினங்கள் சேற்றில், படுத்துக் கொண்டிருக்கும் என்பதால், மடி காம்புகளை அடிக்கடி சுத்தப்படுத்துவது அவசியம். மாட்டுக்கொட்டகைகளில் தண்ணீர், சாணம் சேராமல், சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.கால்நடைகளுக்கு காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்பட்டால், அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை அலுவலரை தொடர்பு கொண்டு, உரிய சிகிச்சையளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மூன்றரை ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பிய ரேலியா அணை; குன்னூர் மக்கள் மகிழ்ச்சி</u>

குன்னூர் : குன்னூர் நகருக்கான முக்கிய குடிநீர் ஆதாரமான ரேலியா அணை, மூன்றரை ஆண்டுகளுக்கு பிறகு, முழு கொள்ளளவை எட்டியது. நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட, 30 வார்டுகளுக்கும்

ஒரே குடிநீர் ஆதாரமாக விளங்கும், ரேலியா அணையில், கடந்த பல ஆண்டுகளாக, சேறும் சகதியும் நிறைந்திருந்தது. இதனால், கோடையில் தண்ணீர் இல்லாமல், குடிநீரை விலை கொடுத்து வாங்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு, குன்னூர் மக்கள் தள்ளப்பட்டனர். இந்நிலையில்,தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக, 43.6 அடி கொள்ளளவு கொண்ட அணை, நேற்று முழுமையாக நிரம்பி, உபரி நீர் வெளியேறியது. அணை நிரம்பியதால், குன்னூர் பகுதி மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்; கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடத்தினர். இந்நிலையில், நேற்று ரேலியா அணையை, நகராட்சி தலைவர் சரவணக்குமார், ஆணையர் ஜான்சன், பொறியாளர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் ஆய்வு செய்தனர். இது தொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு பிறகு முழு கொள்ளளவை எட்டியுள்ளது. இதனால், 5 வால்வுகள் வழியாகவும் தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை, ஒரு நாளைக்கு, 5 லட்சம் லிட்டர் தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டது. இனி தினமும் 15 லட்சம் லிட்டர் தண்ணீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றனர். இதனால், குன்னூரில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக நிலவி வந்த குடிநீர் பிரச்னைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

## <u>மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>

கோத்தகிரி : கோத்தகிரி சுற்றுவட்டார பகுதியில் பெய்துவரும் மழை, விவசாய நிலங்களுக்கு ஏதுவாக அமைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோத்தகிரி நகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்துவருகிறது. இதனால், நீர் ஆதாரங்கள் நிறைந்தும், வறண்டு கிடந்த தேயிலை மற்றும் மலைக்காய்கறி தோட்டங்கள் ஈரமடைந்து வருகிறது. இந்த மழை தேயிலை தோட்டங்களில் உரமிட்டு, பராமரிக்க ஏதுவாக அமைந்துள்ளதால், விவசாயிகள் உரமிடுவதில் ஆர்வம் காட்டி

வருகின்றனர். தவிர, ஏற்கனவே, உரமிட்ட தேயிலை தோட்டங்களில் தற்போது, அரும்புகள் துளிர்விட துவங்கியுள்ளதால், பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ள நிலையில், விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். காய்கறி தோட்டங்களை பொறுத்தமட்டில், மிளிதேன், கேர்கம்பை, வ.உ.சி., நகர், சுள்ளிகூடு மற்றும் கூக்கல்தொரை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் காரட், பீன்ஸ் பயிரிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்துவரும் கன மழையால், மழைநீர் வழிந்தோட முடியாமல், விவசாய நிலங்களில் தேங்குவதால், பயிர்கள் சேதமடைய வாய்ப்புள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.வானம் மேகமூட்டத்துடனான கால நிலை நிலவும் பட்சத்தில், தேயிலை தோட்டங்களில் "கொப்புள நோய்' தாக்கும் என்பதால், மருந்து தெளித்து பாதுகாப்பு நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுப்பட்டு வருகின்றனர்.

**<u>பூக்கள் விலை திடீர் சரிவு: காய்கறி விலை ஏறுமுகம்</u>**

திருச்சி :திருச்சி மாவட்டத்தில், மண்ணச்சநல்லூர், சமயபுரம், மணப் பாறை, துறையூர், கோப்பு, குழுமணி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பூக்கள் ஸ்ரீரங்கம், காந்தி மார்க்கெட் மொத்த வியாபாரிகள் விலை வாங்கி செல்கின்றனர். தீபாவளியையொட்டி, பூக் களுக்கு விலை அதிகரித்து இருந்தது.நேற்று காலை முதல், பூக்களின் விலை குறைய துவங்கி யது. 400 ரூபாய்க்கு விற்ற பெங்களூரு மல்லிகை, 100 ரூபாய்க்கும், 500 ரூபாய்க்கு விற்ற முல்லை 100 ரூபாய்க்கும், 350 ரூபாய்க்கு விற்ற ஜாதி மல்லி, 100 ரூபாய்க்கும், 40 ரூபாய்க்கு விற்ற சம்மங்கி, 20 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்ற அரளி பூ, 40 ரூபாய்க்கும், 120 ரூபாய்க்கு பைவ் ஸ்டார் பூ, 60 ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கு விற்ற பட்டன் ரோஸ், 120 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்ற ஊட்டி ரோஸ், 20 ரூபாய்க்கும், 30 ரூபாய்க்கு விற்ற ரெட் ரோஸ் 10 ரூபாய்க்கும்விற்றது. மழை காரணமாக, சில

காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. தீபாவளிக்கு முன், ஒரு கிலோ கத்தரிக்காய், 35 ரூபாய்க்கு விற்றது. தற்போது, 70 ரூபாய்க்கு விற்கிறது. அதே போல் அவரைகாய், 50 ரூபாயில் இருந்து, 90 ரூபாய்க்கும், முள்ளங்கி, 25 ரூபாயில் இருந்து, 30 ரூபாய்க்கும், கருணை கிழங்கு, 65 ரூபாயில் இருந்து, 80 ரூபாய்க்கும், கேரட், 18 ரூபாயில் இருந்து, 28 ரூபாய்க்கும், உருளை கிழங்கு, 45 ரூபாயில் இருந்து, 48 ரூபாய்க்கும், சின்ன வெங்காயம், 40 ரூபாயில் இருந்து, 50 ரூபாய்க்கும், பீன்ஸ், 40 ரூபாயில் இருந்து, 50 ரூபாய்க்கும் விற்றது. திருச்சி காந்தி மார்க்கெட் வியாபாரிகள் கூறுகையில், ""தீபாவளி முடிந்து விட்டதால், பூக்களுக்கு பெரிய அளவில் தேவை இல்லை. இதனால், விலை குறைந்துள்ளது. தொடரும் மழை காரணமாக, காய்கள் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் லாரி, வேன் உள்ளிட்ட வாகனங்களில் காய்கள் வரத்து குறைந்துள்ளதால், காய்கள் விலை சற்று உயர்ந்துள்ளது'' என்றனர்.

## <u>மிளகு விளைச்சல் மழையால் அதிகரிப்பு</u>

தாண்டிக்குடி :தாண்டிக்குடி புல்லாவெளியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மிளகின் மகசூல் மழையால் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. புல்லாவெளி, தடியன்குடிசை, கொடலங்காடு, கே.சி.பட்டி, ஆடலூர், பன்றிமலை, தாண்டிக்குடி பகுதியில் ஆண்டுக்கு இருமுறை மிளகு அறுவடை செய்யப்படும். கடந்த இரு ஆண்டுகளாக பருவ மழை பெய்யாததால் மிளகு விளைச்சல் பாதித்தது. இதை மட்டுமே நம்பியிருந்த விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். நிர்ணயிக்கப்பட்ட விலை நஷ்டத்தை தவிர்க்கும் என்றாலும் வாடல் நோய் தாக்குதல் காரணமாக தாய்க்கொடி காய்ந்தது விவசாயிகளை விரக்தியடைய செய்தது. தற்போது பெய்து வரும் மழையால் மிளகு கொடிகள் தளிர்த்துள்ளன. காய் பருவத்தில் உள்ள மிளகு அறுவடைக்கு ஏற்றதாக வளர்ச்சியடைந்துள்ளது. மகசூல் அதிகரிக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மருதாநதி அணை திறப்பு

அய்யம்பாளையம் :அய்யம்பாளையம் மருதாநதி அணை நிரம்பியதால் பாசனத்திற்காக திறக்கப்பட்டது. அய்யம்பாளையம் மருதாநதி அணை மூலம் தாமரைக்குளம், ரெங்கசமுத்திரம், கோபாலசமுத்திரம், சொட்டான்குளம், கருங்குளம், சிறுவன்குளம் கண்மாய்களுக்குட்பட்ட 6590 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. அணையின் மொத்த உயரம் 64 அடி. நீர் இருப்பு 63.10 அடி உள்ளது. அணைக்கு 400 கன அடி நீர் வரத்து உள்ளது. இதனுடன் 100 சேர்த்து 500 கன அடி விவசாயத்திற்காக மாவட்ட கலெக்டர் வெங்கடாச்சலம் நேற்று திறந்து வைத்தார். திண்டுக்கல் எம்.பி., உதயகுமார், செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் குமார், உதவி பொறியாளர் கோகுலகண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர். கடந்த இரண்டு நாட்கள் அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட உபரி நீரால் சிறுவன்குளம் நிரம்பியது. தற்போது தாமரைக்குளம், கோபாலசமுத்திரம் கண்மாய்களுக்கு தண்ணீர் செல்கிறது. அணையின் நீர்பிடிப்பு பரப்பு 53.55 சதுர கி.மீ.,ஆகும். ஏற்பாடுகளை உதவியாளர் வீரையன், மஸ்தூர் சுப்பிரமணி செய்திருந்தனர்.

## நீர் வரத்து அதிகரிப்பு

திண்டுக்கல்: ஆத்தூர் காமராஜர் நீர் தேக்கத்தில் விநாடிக்கு 200 கன அடி நீர் வரத்து உள் ளது. அணையிலிருந்து 6.72 கன அடி நீர் வெளி யேறுகிறது. அணையின் மொத்த கொள்ளளவு 158 மி., கனஅடி. தற் போதைய நீர் இருப்பு 6.80 மி.,கன அடியாக உள்ளது.

## 18ம் கால்வாயில் தண்ணீர் திறப்பு

கூடலூர்: லோயர்கேம்ப் பெரியாற்றின் தலைமதகுப் பகுதியில் இருந்து 18ம் கால்வாய்க்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. லோயர் கேம்பில் துவங்கி போடி மீனாட்சிபுரம் வரையுள்ள 18ம் கால்வாயில்

பாசனத்திற்காக நேற்று லோயர்கேம்ப் தலைமதகு பகுதியில் தேனி கலெக்டர் பழனிச்சாமி தண்ணீர் திறந்து வைத்தார். வினாடிக்கு 279 கன அடி நீர் வீதம் 9 நாட்களுக்கு திறக்கப்பட்டுள்ள இத்தண்ணீர் மூலம் 4615 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும். திறக்கப்பட்ட தண்ணீரால் புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, பண்ணைப்புரம், கோம்பை, தேவாரம், சிந்தலச்சேரி, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, பொட்டிபுரம், லட்சுமிநாயக்கன்பட்டி, மீனாட்சிபுரம், டொம்புச்சேரி, கோடாங்கிபட்டி உள்ளிட்ட 13 கிராமங்களில் உள்ள 44 கண்மாய்கள் பயன்பெறும். தண்ணீர் திறப்பு விழாவில் 18ம் கால்வாய் செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் பாலமுருகன், உதவி பொறியாளர்கள் சக்ரவர்த்தி, ரமேஷ், 18ம் கால்வாய் விவசாய சங்க தலைவர் ராமராஜ், துணைத்தலைவர்கள் தங்கராஜ், காளிமுத்து, செயாலாளர் திருப்பதிவாசன், இணைச்செயலாளர் சலேத்து, துணைச்செயலாளர் பெருமாள், பொருளாளர் பாண்டியன், ஐந்து மாவட்ட செயலாளர் வடமலைமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>முதுகுளத்தூரில் நெல்லுக்கு மாற்றாக மக்காச்சோளம் சாகுபடி</u>**

முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் அருகே நல்லூரில் நெல் சாகுபடிக்கு மாற்றாக, விவசாயிகள் மக்காச் சோளம் சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். முதுகுளத்தூர் வட்டார வேளாண்மை துறை, வேளாண் விரிவாக்க இயக்கம் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் முதுகுளத்தூர் அருகே நல்லூரில் ஒட்டுரக மக்காச்சோளம் செயல் விளக்க திடங்கள் அமைக்கபட்டுள்ளது. இதில் ஒரு ஏக்கர் பரப்பளவில் நல்லூர் விவசாயி ஞானபாண்டி வீரிய ஒட்டு ரகமான "பயோனியர்' மக்காச்சோளம் பயிரிட்டுள்ளார். பருவ மழை பொய்ப்பால் இப்பகுதியில் நெல் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக, மக்காச்சோளம் சாகுபடியில் ஏராளமான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறைந்த மழையிலும் 95 நாட்களில் ஒரு ஏக்கரில் 2 ஆயிரம் கிலோ மகசூல்

கிடைக்கும். தானியங்களின் "ராணி' என்றழைக்கப்படும் மக்காசோளத்தை நெல் பயிருக்கு மாற்றாக பயிரிட்டு விவசாயிகள் பயன்பெற வேண்டும் என, முதுகுளத்தூர் வட்டார வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

## மானிய விலையில் உரம்

முதுகுளத்தூர் :முதுகுளத்தூர் வேளாண் உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: தற்போது பெய்து வரும் மழையால், விவசாய நிலங்களில் போதிய அளவு ஈரம் உள்ளது. இதனால் நெல் பயிருக்கு அடி உரமாக ஏக்கருக்கு 10 கிலோ "சிங்க் சல்பேட்' அல்லது நெல் நுண்ணூட்ட உரத்தை 5 கிலோ போதிய அளவு மணலுடன் கலந்து இடவேண்டும். முதுகுளத்தூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் "சிங்க் சல்பேட்' 15 மெட்ரிக் டன், நெல் நுண்ணூட்டம் 9 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (அரிசி) திட்டத்தில் 50 சதவீத மானிய விலையில், "சிங்க் சல்பேட்', நெல் நுண்ணூட்டம், "பிஸ்பைரிபேக் சோடியம்' களைக் கொல்லி விற்பனை செய்யப்படுகிறது, என்றார்.

## குமரியில் மழை நீடிப்பு; அணைகள் கண்காணிப்பு

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை நீடித்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. 48 அடி கொள்ளவு கொண்ட பேச்சிப்பாறை அணை 38 அடியை எட்டியுள்ளது. 77 அடி கொள்ளவு கொண்ட பெருஞ்சாணி அணையில் 66.75 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகமாக உள்ளதால் அணை 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் அணைகளுக்கு சென்று நீர் நிலவரத்தை ஆய்வு செய்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**பஞ்சாபில் 40 லட்சம் டன் நெல் கொள்முதல்**



சண்டிகர்: பஞ்சாப் மாநிலத்தில் நடப்பு காரீப் பருவத்தில் நெல் கொள்முதல் விறுவிறுப்புடன் நடந்து வருகிறது. அந்த மாநிலத்தில் பல்வேறு இடங்களில் அரசு சார்பில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் இருந்து இதுவரை 40 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு ரூ.2ஆயிரம் கோடி பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாக இந்திய உணவு கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஒடிசா அரசு தீவிரம்**



புவனேஸ்வர்: ஒடிசா மாநிலத்தில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில் தரமான விதைகளை கொள்முதல் செய்திட தேசிய விதைகள் கழகத்துடன் ஒடிசா அரசு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. அதன்படி, 50 ஆயிரம் குவிண்டால் உருளைக்கிழங்கு விதையும், 1,500 குவிண்டால் வெங்காய விதையும்

தேசிய விதைகள் கழகத்திடம் இருந்து பெறப்பட்டு நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று அந்த மாநில வேளாண் துறை அமைச்சர் பிரதீப்மகாரதி தெரிவித்தார். தற்போது, ஆண்டுக்கு 10.5 லட்சம் டன் உருளைக் கிழங்கு தேவை இருக்கிறது. ஆனால், இன்றைய நிலவரப்படி 2.5 லட்சம் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, பற்றாக்குறையை ஈடு செய்து அதிகளவில் உற்பத்தியை பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் தரமான விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி அதன் மூலம் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று பிரதீப் சுட்டிகாட்டினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அணைகள் வேகமாக நிரம்புகின்றன பல இடங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின**



தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. பருவமழை தீவிரம் இதனால் கடந்த சில நாட்களாக மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக தென் மாவட்டங்களில் சில பகுதிகளில் கனமழை பெய்து உள்ளது. தீபாவளி அன்று சற்று ஓய்ந்திருந்த மழை மீண்டும் பெய்யத்தொடங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். அணைகள் நிரம்புகின்றன தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக மாநிலத்தில் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. சில இடங்களில் காட்டாறுகள், மற்றும் ஓடைகளில் வெள்ளப்பெருக்கு

ஏற்பட்டு உள்ளது. தமிழக எல்லையில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், மேட்டூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 10 ஆயிரத்து 650 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து இருப்பதாலும், காவிரி டெல்டா பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், அணையில் இருந்து பாசன தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதமே தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. கடந்த 20-ந்தேதி 88 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 91.14 அடியாக உயர்ந்தது. அணையின் மொத்த உயரம் 120 அடி ஆகும். வைகை அணை தேனி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக நீர் வரத்து அதிகரித்து இருப்பதால், 142 அடி உயரம் கொண்ட முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 128.8 அடியாகவும், 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் 48.2 அடியாகவும் உயர்ந்து உள்ளது. பெரியாறு அணைக்கு வினாடிக்கு 2,658 கனஅடி தண்ணீரும், வைகை அணைக்கு வினாடிக்கு 3,766 கனஅடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 57 அடி உயரம் கொண்ட மஞ்சளாறு அணையும், 126 அடி உயரம் கொண்ட சோத்துப்பாறை அணையும் ஏற்கனவே நிரம்பி விட்டதால், அந்த அணைகளில் இருந்து பாசனத்துக்காக உபரி நீர் திறந்து விடப்படுகிறது. 65.22 அடி உயரம் கொண்ட வரதமாநதியும் நிரம்பி வழிகிறது. மேலும் மாவட்டத்தில் உள்ள பாலாறு, பரப்பலாறு, குதிரையாறு உள்ளிட்ட அணைகளும் வேகமாக நிரம்பிவருகின்றன.

நெல்லைமாவட்டம்

நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பெய்து வருவதால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனா நதி,

ராமநதி உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்புகின்றன. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 95.4 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 111.15 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 72.75 அடியாகவும், கடனா நதியின் நீர்மட்டம் 81.8 அடியாகவும், ராமநதியின் நீர்மட்டம் 73.5 அடியாகவும், கருப்பாநதியின் நீர்மட்டம் 64.31 அடியாகவும், அடவி நயினார் கோவில் அணையின் நீர்மட்டம் 115 அடியாகவும் உயர்ந்து உள்ளது. குமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 37.55 அடியாகவும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 66.75 அடியாகவும் அதிகரித்து இருக்கிறது.

வெள்ளஅபாயஎச்சரிக்கை

கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் 50.4 அடியாகவும், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 72.55 அடியாகவும் உயர்ந்து உள்ளது. கோவை மாவட்டம் சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு, சிறுவாணி அணைகள் நிரம்பிவிட்டன. பவானிசாகர் அணையில் 95.4 அடியும், அமராவதி அணையில் 79.3 அடியும், திருமூர்த்தி அணையில் 41.5 அடியும் தண்ணீர் உள்ளது. ஈரோடு மாவட்டம் குண்டேரிப்பள்ளம் அணையின் நீர்மட்டம் தனது முழு அளவான 42 அடியை எட்டிவிட்டதால் உபரிநீர் வெளியேறுகிறது. இதன் காரணமாகவும், பில்லூர் அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி நீர் வெளியேற்றப்படுவதாலும் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனால் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

சென்னைஏரிகள்

சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 210 கனஅடியும், செம்பரம்பாக்கம் ஏரிக்கு வினாடிக்கு 60 கனஅடியும் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. பூண்டி ஏரியில் 220 மில்லியன்

கனஅடியும், செங்குன்றம் ஏரியில் 880 மில்லியன் கனஅடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் 1,069 மில்லியன் கனஅடியும் நீர் இருப்பு உள்ளது. கடலூர் மாவட்டம் வீராணம் ஏரியில் 45.5 அடிக்கு தண்ணீர் உள்ளது. அணைகள் மற்றும் ஏரிகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கண்காணித்துவருகிறார்கள்.

பயிர்கள்மூழ்கின

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ள போதிலும், சில இடங்களில் மழை அவர்களுக்கு பாதிப்பையும் ஏற்படுத்தி உள்ளது. பல ஏக்கர் நிலங்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா, தாளடி சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் மழை பெய்யத்தொடங்கி இருப்பது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இருப்பினும் ஒரு சில இடங்களில் தற்போது நடவு செய்யப்பட்ட சம்பா பயிர்களும், தாழ்வான பகுதியில் உள்ள சம்பா பயிர்களும் நீரில் மூழ்கின. ஒரு நாள் மழை இன்றி காணப்பட்டதால் வயல்களில் தேங்கிய மழைநீர் வடியத்தொடங்கியது. இந்த நிலையில் மீண்டும் மழை பெய்யத்தொடங்கி உள்ளது. நாகை மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நாகையை அடுத்த கருவேலங்கடை, வடுவூர், செட்டிச்சேரி, ஆய்மழை, நிர்த்தனமங்களம், வேதாரண்யம், கீழ்வேளூர் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சுமார் 3,450 ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.

குற்றாலம்அருவிகள்

தென்காசி, குற்றாலம் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று மதியம் பலத்த மழை பெய்தது. குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவி ஆகிய அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு குறைந்ததால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். அம்பை பகுதிகளில் நேற்று காலையில் தொடர்ந்து மழை

தூறிக்கொண்டே இருந்தது. வீரவநல்லூரில் நேற்று முன்தினம் இரவில் பலத்த மழை பெய்தது. இதனால் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. நேற்று காலையிலும் மழை பெய்து கொண்டே இருந்தது. குளம்உடைந்தது. தொடர்ந்து பெய்த மழை காரணமாக ஆலங்குளம் அருகே உள்ள ஊத்துமலை பெரியகுளம் நிரம்பியது. வெள்ளப்பெருக்கு

திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி, ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு, நிலக்கோட்டை, கொடைரோடு, சின்னாளப்பட்டி, பட்டிவீரன்பட்டி, பெரும்பாறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. சில நாட்களாக பெய்த மழை காரணமாக கொடைக் கானல் அப்சர்வேட்டரி பகுதி யில் உள்ள ரிசர்வ்வாயர், மனோரஞ்சிதம் ஆகிய 2 அணைகளும் நிரம்பின. வெள்ளி நீர்வீழ்ச்சி, பாம்பார் நீர்வீழ்ச்சி ஆகியவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. மரம் சாய்ந்துமின்கம்பம் உடைந்தது. ‘ஏழைகளின் ஊட்டி’ என்று அழைக்கப்படும் ஏற்காட்டில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஏற்காட்டிற்கு செல்லும் மலைப்பாதைகளில் திடீர் அருவிகள் தோன்றி உள்ளன. கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஏற்காட்டில் பலத்த காற்றுடன் கனமழை கொட்டியது. இதனால் தலைச்சோலை கிராமத்துக்கு செல்லும் சாலையின் ஓரத்தில் இருந்த பெரிய சவுக்கு மரம் வேரோடு சாய்ந்து அருகில் இருந்த மின்கம்பத்தின் மீது விழுந்தது. இதனால் அந்த மின்கம்பத்தின் மேல் பகுதி உடைந்து தொங்கியது. மின்கம்பிகள் அறுந்து சாலையில் விழுந்தன. இதை பார்த்த கிராம மக்கள் அசம்பாவிதம் ஏற்படாத வகையில் சாலையின் இருபுறமும் கற்களை வைத்து அந்த வழியாக வாகனங்கள் செல்ல தடையை ஏற்படுத்தினார்கள். இதுபற்றி தகவல் அறிந்ததும் ஏற்காடு மின்வாரிய ஊழியர்கள் அங்கு சென்று உடைந்த மின்கம்பத்தை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டனர். கடலூர் மாவட்டத்தில் இதுவரை

பெய்த மழைக்கு 62 வீடுகள் சேதமடைந்து உள்ளன. 4 மாடுகள், 7 ஆடுகள் உயிரிழந்து உள்ளன.

## <u>நீலகிரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம்: பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு பவானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது</u>



நீலகிரியில் பெய்து வரும்தொடர் மழையால் பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. நீலகிரியில் தொடர் மழை கோவை மாவட்டத்தில் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் பில்லூர் அணை அமைந்துள்ளது. கேரள மாநிலம், நீலகிரி மாவட்டம் மற்றும் பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை நீரை ஆதார மாகக் கொண்டு பில்லூர் அணை கட்டப்பட்டது. அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 100 அடியாகும். கோவை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந் துள்ளது. அதிலும் நீலகிரி மாவட்டத் தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் கடந்த 22-ந் தேதி மாலை 87 அடியாக இருந்த அணையின் நீர்மட்ட உயரம் தண்ணீர் வரத்து அதிகரித்த காரணத் தால் நேற்று 88 அடியை எட்டியது.

பவானிஆற்றில்வெள்ளம்

இதற்கிடையே அணையில் மின்உற்பத்திக்காக 2 எந்திரங்கள் இயக்கப்பட்டன. இதனால் அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப் பட்டது. இதனால் பவானி ஆற்றில்

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாகவே பவானி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடி வருகிறது. இதனால் மேட்டுப்பாளையம், பவானி ஆற்றுப்பாலம் அருகே உள்ள பவானி அம்மன் கோவில், மற்றும் விளையாட்டு மாரியம்மன் கோவில்களை வெள்ளம் சூழ்ந்து நிற்கிறது. ஆற்றில் வெள்ளப்பெருக்கு குறைந்தால் தான் இந்த கோவில்களுக்கு செல்ல முடியும் என்ற நிலை காணப்படுகிறது. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, வருவாய்த்துறை மூலம் ஆற்றின் கரையோரப்பகுதி மக்களுக்கு தொடர்ந்து வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வருவாய்த் துறையினர், போலீசார், தீயணைப்பு துறையினர் மற்றும் மருத்துவக்குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.

**கோவை மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக குளங்கள்-பண்ணை குட்டைகள் நிரம்பின விவசாயிகள் மகிழ்ச்சி**



கோவை மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக ஏராளமான குளங்கள் மற்றும் பண்ணை குட்டைகள் நிரம்பி உள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்துஉள்ளனர்.

குளங்கள்நிரம்பின

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதற்கிடையே வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளதால், மாநகர பகுதி மற்றும் மாவட்ட பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த கனமழை காரணமாக மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. கோவை மாவட்டத்தில் 30-க்கு மேற்பட்ட குளங்களும், 500-க்கும் மேற்பட்ட பண்ணை குட்டைகளும் உள்ளன. இதில் 20-க்கும் மேற்பட்ட

குளங்களும், 400-க்கும் மேற்பட்ட பண்ணை குட்டைகளும் நிரம்பி வழிந்து வருகின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயர வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இதுகுறித்து வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:- 10-க்கும் மேற்பட்ட குளங்கள் கோவை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக மாநகர பகுதியில் உள்ள 8 குளங்களில் உக்கடம் பெரியகுளம், வாலாங்குளம் ஆகிய குளங்களை தவிர மற்ற அனைத்து குளங்களும் நிரம்பி விட்டன. அதுபோன்று புறநகர் மாவட்ட பகுதியில் உள்ள செம்மேடு குளம், பேரூர் செட்டிபாளையம் குளம், வேடப்பட்டி கோளராம்பதி குளம் உள்பட 10-க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பி விட்டன. ஒருசில குளங்கள் பெரியதாக இருப்பதால் அந்த குளங்களில் 70 சதவீதத்துக்கு தண்ணீர் உள்ளன. இதேப்போன்று மழை பெய்து வந்தால் ஓரிரு நாட்களில் மாவட்ட பகுதியில் உள்ள அனைத்து குளங்களும் நிரம்பிவிடும். நிலத்தடி நீர்மட்டம் கடந்த ஆண்டில் போதிய அளவு பருவமழை பெய்யாததால், மாவட்டத்தில் உள்ள பண்ணை குட்டைகளுக்கு தண்ணீர் வரவில்லை. அத்துடன் குட்டைகளுக்கு வரும் வடிகால்களும் சேதடைந்து காணப்பட்டன. அதை வேளாண்துறை அதிகாரிகள் கண்டறிந்து சரிசெய்தனர். இதன் காரணமாக தற்போது பெய்து வரும் மழையால் பெரும்பாலான பண்ணை குட்டைகள் நிரம்பி உள்ளன. தற்போது மாநகர மற்றும் புறநகர் மாவட்ட பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிக்கும் கீழ் சென்று விட்டது. தற்போது பெய்து வரும் மழை காரணமாக குளங்கள் மற்றும் பண்ணை குட்டைகள் நிரம்பி உள்ளதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர வாய்ப்பு உள்ளது. மழைநீரைசேமிக்கலாம். கோவை மாவட்டத்தில் உள்ள முக்கிய ஆறான நொய்யல் ஆற்றில் சூலூர் தடுப்பணையை தாண்டி தண்ணீர் செல்கிறது. இதனால் சூலூர் மற்றும் அதைச்சுற்றி உள்ள குளங்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டு உள்ளதால் அந்த குளங்களும் வேகமாக நிரம்பி வருகிறது. பெரும்பாலன பகுதிகளில் மழைநீர் வீணாக செல்கிறது.

எனவே மழைநீரை சேமிக்கும் வகையில் விவசாயிகளும் தங்களுடைய தோட்டத்தில் தாழ்வான பகுதிகளில் பண்ணை குட்டைகளை அமைத்தால் மழைநீர் வீணாக செல்வதை சேமிக்க முடியும். அத்துடன் இந்த பண்ணை குட்டைகளில் மீன்களையும் வளர்க்கலாம் என்பதால் விவசாயிகளுக்கு லாபமும் கிடைக்கும். குறைந்த பட்ச மழை பெய்தாலே இந்த பண்ணை குட்டைகள் நிரம்பிவிடும். இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் மானிய விலையில் வழங்க முடிவு

கோவை மாவட்டத்தில் மின்சாரத்தை சேமிக்கும் வகையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய சக்தி மோட்டார் வழங்க முடிவுசெய்யப்பட்டுஉள்ளது.

1.76லட்சம்எக்டேர்

கோவை மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், அன்னூர், கிணத்துக்கடவு, சூலூர், கோவை தெற்கு, கோவை வடக்கு, பேரூர், மதுக்கரை ஆகிய தாலுகாக்களில் மொத்தம் 1 லட்சத்து 76 ஆயிரம் எக்டேர் விவசாய நிலம் உள்ளது. இதில் 90 ஆயிரம் எக்டேரில் நெல், தக்காளி, வாழை, கரும்பு உள்பட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. 40 ஆயிரம் எக்டேரில் மா, நெல்லி, முருங்கை, கருவேப்பிலை உள்பட பல பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. மீதமுள்ள எக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்போது தண்ணீர் தட்டுப்பாடு, மின்சார பற்றாக்குறை ஆகியவை காரணமாக விவசாயம் செய்வதில் ஆர்வம் குறைந்து வருவதாக கூறப்படுகிறது. சூரிய சக்தி மோட்டார் எனவே காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விவசாயிகளுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்கும் வகையிலும் கோவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு சூரிய ஒளியில் இயங்கக்கூடிய மோட்டார் வழங்க முடிவு செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து கோவை மாவட்டத்துக்கு

இந்த ஆண்டில் முதல் கட்டமாக 60-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக சூரிய சக்தி மோட்டார் வந்து உள்ளது. எனவே அந்த விவசாயிகளை தேர்வு செய்யும் பணியில் வேளாண்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் ஈடுபட்டு வருகிறார்கள். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது:- ரூ.4 லட்சம் மானியம் மின்சார பற்றாக்குறை காரணமாக காய்கறிகள் உற்பத்தி குறைந்துவிட்டால், அதன் விலை உயர்ந்து விடும். எனவே காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், விவசாயிகளுக்கு சூரிய சக்தி மோட்டார் வழங்கப்படுகிறது. அதன்படி ஒவ்வொரு விவசாயிகளுக்கும் 5 எச்.பி. சக்தி கொண்ட மோட்டார் வழங்கப்படுகிறது. இதன் விலை ரூ.5 லட்சம் ஆகும். அதில் விவசாயிகள் ரூ.1 லட்சம் கொடுத்தால் போதும். மீதமுள்ள ரூ.4 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது முதற்கட்டமாக விவசாயிகளுக்கு வழங்க நமது மாவட்டத்துக்கு 69 சூரிய சக்தி மோட்டார் வழங்கப்பட்டு உள்ளது. அதிகமாக காய்கறிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. சூரிய சக்தி மோட்டாரை பயன்படுத்துவதன் மூலம் அதிகளவில் மின்சாரம் சேமிக்க முடியும். எனவேதான் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதன் பராமரிப்பும் மிகவும் குறைவு. 5 வருடம் உத்தரவாதம் கொடுத்து, சூரிய சக்தி மோட்டாரை பொருத்தும் நிறுவனமே குறைந்தது 2 மாதத்துக்கு ஒருமுறை வந்து பராமரிப்பதால் எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே விவசாயிகள் இந்த சூரிய சக்தி மோட்டாரை வாங்கி பயன்படுத்தலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தில் தொடர்மழை: மாரண்டஅள்ளியில் அதிகபட்சமாக 47 மி.மீ பதிவு

வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால் தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து

வருகிறது. தீபாவளி பண்டிகையான நேற்று முன்தினம் பிற்பகல் முதல் இரவு வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக மாரண்டஅள்ளியில் 47 மி.மீ மழை பதிவானது. இதேபோல் நேற்று காலை முதல் மாலை வரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விட்டுவிட்டு மழை பெய்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று அதிகாலை வரை பெய்த மழையளவு விவரம்(மி.மீ) வருமாறு:– மாரண்டஅள்ளி–47, பாலக்கோடு–9.3, பஞ்சப்பள்ளி–5, தர்மபுரி–4, பென்னாகரம்–5.8, பாப்பிரெட்டிப்பட்டி–3.2, ஒகேனக்கல்–10.3, வாணியாறு–5, சின்னாறு–6.

## <u>தூத்துக்குடி மாவட்டத்தில் பரவலாக மழை குளங்கள் வேகமாக நிரம்புகின்றன</u>



தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

<u>பலத்த மழை</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பெரும்பாலான குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. தூத்துக்குடி பகுதியில் பெய்த மழையால் தாழ்வான பகுதிகளில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி கிடந்தது. இதனை மாநகராட்சி அதிகாரிகள் உடனுக்குடன் லாரிகள் மூலம் அகற்றினர். உப்பளங்கள் அனைத்தும் மழைநீரில் மூழ்கின. அதே போன்று மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் வேகமாக குளங்கள் நிரம்பி வருகின்றன. மாவட்டத்தில் 596 மானாவாரி குளங்கள் உள்ளன. இதில் ஓட்டப்பிடாரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள சுமார் 30

சதவீதம் மானாவாரி குளங்கள் நிரம்பி உள்ளன. மற்ற குளங்களில் சுமார் ஒரு மாதம் வரைக்கும் தண்ணீர் இருப்பு உள்ளது. இதே போன்று தாமிரபரணியின் கீழ் நேரடி பாசன வசதி கொண்ட 53 குளங்கள் உள்ளன. இதில் 17 குளங்கள் நிரம்பி உள்ளன. மற்ற குளங்களுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது.

<u>கோரம்பள்ளம் குளம்</u>

தூத்துக்குடி அருகே உள்ள கோரம்பள்ளம் குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகரித்ததால் குளம் நிரம்பும் தருவாயில் இருந்தது. இதனால் பொதுப்பணித்துறை சார்பில் குளத்தை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தாமிரபரணி வடிநில கோட்ட உதவி என்ஜினீயர் ரகுநாதன் நேற்று காலையில் கோரம்பள்ளம் குளம் 24 கண் பாலத்தில் உள்ள ஒரு மடையை திறந்தார். இது குறித்து தகவல் அறிந்த அந்த பகுதி விவசாயிகள் அங்கு விரைந்து வந்தனர். அதிகாரியை முற்றுகையிட்டு குளத்தை திறந்து தண்ணீரை வெளியேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து தூத்துக்குடி தாசில்தார் இளங்கோ, முத்தையாபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அரிகரன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்பிறகு அதிகப்படியாக வரும் தண்ணீர் வெளியேறும் வகையில் ஒரு மடை மட்டும் திறக்கப்பட்டது.

<u>விவசாயிகள் எதிர்ப்பு</u>

இதுகுறித்து விவசாயிகள் கூறும் போது, கோரம்பள்ளம் குளம் 700 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த குளத்தின் கீழ் சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் பாசன வசதி உள்ளது. இந்த குளத்தின் மடை பகுதி மட்டுமே ஆழமாக உள்ளது. 9 அடி ஆழம் கொண்ட இந்த குளத்தில் சுமார் 7½ அடி அளவுக்கு மட்டுமே தண்ணீர் உள்ளது. மற்ற பகுதிகளில் ஆழம் மிகவும் குறைவாக உள்ளது. இதனால் தண்ணீரை தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளது. சமீபத்தில் இந்த குளத்தின் கரை புதிதாக அமைக்கப்பட்டது. இதனால் தண்ணீரை தேக்கி வைப்பதால் எந்த பாதிப்பும் கிடையாது.

தற்போது தண்ணீரை வீணாக கடலுக்கு திறந்து விட்டால் விவசாயம் பாதிக்கப்படும். ஆகையால் தண்ணீரை திறந்து விடக்கூடாது என்று தெரிவித்தனர்.

<u>மழை விவரம்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை விவரம்(மில்லி மீட்டரில்) வருமாறு:–

கோவில்பட்டி– 4

ஓட்டப்பிடாரம்– 14

சாத்தான்குளம்– 12.50

ஸ்ரீவைகுண்டம்– 10

தூத்துக்குடி– 14.70

திருச்செந்தூர்– 26

விளாத்திகுளம்– 29

கயத்தாறு– 6

காயல்பட்டினம்– 11

குலசேகரன்பட்டினம்– 12

கீழஅரசடி– 14.30

எட்டயபுரம்– 3

கடம்பூர்– 18

மணியாச்சி– 9

சூரங்குடி– 17

காடல்குடி– 20

வைப்பாறு– 55

கழுகுமலை– 10

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மி.மீ) விவரம் வருமாறு:–

திருவாரூர்–6, குடவாசல்–15, மன்னார்குடி–21, முத்துப்பேட்டை–8, நன்னிலம்–16, நீடாமங்கலம்–17, திருத்துறைப்பூண்டி–10, வலங்கைமான்–11, பாண்டவையாறு தலைப்பு–13. சராசரியாக மாவட்டத்தில் 13 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

**<u>திருவண்ணாமலையில் பலத்த மழை</u>**

திருவண்ணாமலையில் கடந்தசில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலையில் லேசான மழை பெய்தது. இந்த நிலையில் நேற்று காலை 10.30 மணிக்கு திடீர் என்று மழைபெய்யத் தொடங்கியது. தொடர்ந்து பலத்த மழை பெய்தது. பின்னர் சிறிது நேர இடைவெளிக்கு பிறகும் பலத்த மழை பெய்தது. மாலையில் வானம் மேக மூட்டத்துடனேயே இருந்தது. மழை காரணமாக பள்ளமான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. இரவில் குளிர்ந்த காற்று வீசியது.

**<u>மாவட்டத்தில் 6–வது நாளாக தொடர் மழை</u>**



விழுப்புரம் மாவட்டத் தில் நேற்று 6–வது நாளாக மழை பெய்தது. தொடர்மழை வடகிழக்கு பருவமழை தொடங்கியதை அடுத்து தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகின்றது. அதன்படி விழுப்புரத்தில் கடந்த 16–ந் தேதி முதல் தொடர் மழை பெய்து வருகின்றது. இதைய டுத்து பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று முன்தினமும், நேற்றும் விடுமுறை அளிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவிலும் மாவட் டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. விழுப்புரத்தில் இரவு 10.30 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை இடைவிடாமல் 1 மணி நேரத்திற்கும் மேலாக சாரல்

மழையாக தூறிக் கொண்டே இருந்தது. நள்ளிரவிலும் இந்த மழை நீடித்தது. தொடர்ந்து நேற்றும் 6–வது நாளாக தொடர்ந்து மழை பெய்தது. காலை 6 மணி முதல் 7 மணி வரை விழுப்புரம் நகரில் லேசான மழை பெய்தது. பின்னர் வெயில் வாட்டி வதைத்தது. பின்னர் காலை 11 மணியளவில்  கருமேகங்கள் சூழ்ந்து மீண்டும் மழை கொட்டியது. தொடர்ந்து மாலை வரை வானம் மேகமூட்டத்துடன் காணப் பட்டது. அவ்வப்போது லேசாக சாரல் மழை தூறிக் கொண்டே இருந்தது. இதனால் தீபாவளிக்காக கடை அமைத்திருந்த பட்டாசு கடைக்காரர்கள் மிகுந்த அவதிப்பட்டனர்.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை வரை பெய்த மழையால் கள்ளக்குறிச்சி அருகே தச்சூர், லட்சியம், சிறுவங்கூர் ஆகிய கிராமங் களை சேர்ந்த சக்திவேல், பிரியா உள்ளிட்ட 4 பேரின் கூரை வீட்டின் மண் சுவர் திடீரென இடிந்து விழுந்து சேதமடைந்தது. கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை பெய்த மழை நேற்று அதிகாலை 4 மணிக்கு நின்றது. பின்னர் வழக்கம் போல் நேற்று காலை முதல் மதியம் 1 மணி வரை கள்ளக்குறிச்சி நகரில் வெயில் அடித்து வந்த நிலையில் பொதுமக்கள் தீபாவளிக்கு புத்தாடைகள், பட்டாசுகள் வாங்க நகருக்கு வரத் தொடங் கினர். இந்த நிலையில் மதியம் 1.30  மணிக்கு திடீரென வானம் மேகமூட்டத்துடன் காணப் பட்டு குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. அடுத்த சில நிமிடங்களில் சாரல் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை இடைவிடாமல் ½ மணி நேரத்திற்கும் மேலாக தூறிக் கொண்டே இருந்தது. தொடர் மழை காரணமாக சாலைகளில் நடந்து சென்ற பாதசாரிகள் குடைகளை பிடித்தபடி சென்றதையும் வாகனங்கள் முகப்பு விளக்குகளை ஒளிர விட்டு சென்றதையும் காண முடிந்தது. தியாகதுருகம் பகுதியில் பெய்த தொடர் மழை காரண மாக தாழ்வான பகுதியான சந்தைமேடு பள்ளிவாசல் தெருவில் மழைநீர்

தேங்கி நிற்கிறது. அதேபோல் அசக ளத்தூர் கிராமத்தில் உள்ள பல்வேறு தாழ்வான தெருக் களில் மழைநீர் தேங்கி நிற்ப தால் கொசுக்கள் அதிகளவில் உற்பத்தியாகி பல்வேறு தொற்று நோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே தியாகதுருகம், அச களத்தூர் பகுதிகளில் பொது மக்கள் வசிக்கும் இடங்களில் தேங்கி நிற்கும் மழைநீரை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூங்கில்துறைப்பட்டு அருகே மங்களம் கிராம பஸ் நிறுத்தத்தில் உள்ள நிழற்குடை மேற்கூரை கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக நேற்று அதிகாலை இடிந்து விழுந்து சேதமானது. நள்ளிரவு நேரத்தில் பஸ் நிழற்குடையின் மேற்கூரை விழுந்ததால் எவ்வித உயிர் சேதமும் ஏற்படவில்லை.

திருவெண்ணெய்நல்லூர்

திருவெண்ணெய்நல்லூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான அரசூர், பேரங் கியூர், ஆனத்தூர், மடப்பட்டு, பெரியசெவலை, அருங் குறிக்கை, எடப்பாளையம், சித்தலிங்கமடம், உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 6 நாட்களாக பெய்து வரும் கனமழையினால் அனைத்து கிராமங்களில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பி வருகிறது. மேலும் மடப்பட்டு அருகே உள்ள பரவனந்தல், ஆனை வாரி பகுதிகளில் உள்ள ஏரி நிரம்பி மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேறி வரு கிறது. இதனால் விவசாயிகள் பயிரிட்டுள்ள நெல், கரும்பு, பருத்தி உள்ளிட்ட அனைத்து வகையான பயிர்களும் அமோக விளைச்சல் பெறும் என்று விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். பலத்த மழைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் திருவெண்ணெய் நல்லூர் அருகே உள்ள இளந் துரை கிராமத்தை சேர்ந்த அல்லிமுத்து வீட்டின் மேற் கூரை இடிந்து விழுந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக அல்லிமுத்துவின் குடும்பத் தினர் காயமின்றி தப்பினர்.

திண்டிவனம் பகுதியிலும் நேற்று முன்தினம் நள்ளிரவு அவ்வப்போது விட்டு விட்டு சாரல் மழை பெய்தது. நேற்று காலை முதல் மதியம் வரையும் விட்டு விட்டு சாரல் மழை பெய்தது. இதே போல் திருக்கோவிலூர், செஞ்சி, மரக்காணம், வானூர் உள்ளிட்ட மாவட்டத்தின்

பல்வேறு பகுதிகளிலும் நேற்று சாரல் மழை பெய்தது.

மழைஅளவு

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவின் விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

உளுந்தூர்பேட்டை – 59

கள்ளக்குறிச்சி – 43

சங்கராபுரம் – 40

விழுப்புரம் – 30.50

திண்டிவனம் – 26.30

திருக்கோவிலூர் –22.50

செஞ்சி – 19

**<u>மாவட்டத்தில் பரவலாக மழை ஏரிகள், குளங்கள் நிரம்புகின்றன</u>**



விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையினால் ஏரிகள், குளங்கள்நிரம்புகின்றன.

தொடர்மழை

அரபிக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வானது அதே இடத்தில் நீடிப்பதாலும், தென்மேற்கு வங்கக்கடலில் காற்று மேல் அடுக்கு சுழற்றி நிலவுவதாலும் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும் என சென்னை வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாக தொடர்ந்து மழை பெய்தது. நேற்று முன்தினம் மழை சற்று ஓய்ந்ததால் பொதுமக்கள் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடினர். ஆனால் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மேல் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்தது. பலத்த மழையாக பெய்யாமல் அவ்வப்போது விட்டுவிட்டு சாரல் மழையாக தூறிக்

கொண்டே இருந்தது. விழுப்புரத்தில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப் பட்டது. பின்னர் 11 மணிய ளவில் வானத்தில் கருமேகங் கள் சூழ்ந்து கனமழை கொட் டியது. இதனால் கே.கே. சாலை, பாகர்ஷா வீதி, நேருஜி சாலை, புதிய பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தொடர்ந்து மாலை வரை அவ்வப்போது விட்டு விட்டு சாரல் மழை பெய் தது.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி, கல்வராயன் மலை பகுதிகளில் கடந்த ஒருவாரத்திற்கு மேலாக பலத்த மழை பெய்தது. இதனால் கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை காரணமாக காட்டாறு வழியாக மழைநீர் கல்வராயன்மலை அடிவாரத் தில் உள்ள கோமுகி அணைக்கு வருவதால் அணையின் நீர்மட்டம் தற்போது 38.50 அடியாக உயர்ந்துள்ளது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக பெய்து வந்த மழை நேற்று முன்தினம் ஓய்ந்து வெயில் அடித்ததால் பொது மக்கள் தீபாவளி பண்டிகையை பட்டாசுகள் வெடித்து மகிழ்ச் சியுடன் கொண்டாடினர். இந்த நிலையில் நேற்று அதிகாலை முதல் கள்ளக்குறிச்சி பகுதிகளில் மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்தது. அவ்வப்போது பலத்த மழையாகவும், விட்டு, விட்டு சாரல் மழையாகவும் தூறிக் கொண்டே இருந்தது. மதியம் 12 மணிக்கு இடி- மின்னலுடன் கனமழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை இடைவிடாமல் சுமார் 1 மணி நேரமாக கனமழையாக கொட்டி தீர்த்தது. இதனால் கள்ளக் குறிச்சி நகரில் உள்ள சாலை களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.தாழ்வான பகுதி களிலும் குளம்போல் தண்ணீர் தேங்கியது. கள்ளக்குறிச்சி பஸ் நிலையத்தில் சாக்கடை வடிகால்கள் நிரம்பி தண்ணீர் குளம்போல் தேங்கியதால் பயணிகள் கடும் அவதிப் பட்டனர்.ஏரி, குளங்கள் நிரம்புகின்றன. கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் மழை காரணமாக கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், தியாகதுருகம், கச்சிராயப் பாளையம், சின்னசேலம் பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள் நிரம்பி வருகின்றன. குறிப்பாக சங்கராபுரம் அருகே உள்ள பூட்டை ஏரி

கடந்த சில நாட்களாக பெய்த பலத்த மழை காரணமாக தற்போது நிரம்பி தண்ணீர் வழிந்தோடு கிறது. இதனால், கள்ளக்குறிச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த விவசாயி கள் பெரும் மகிழ்ச்சியடைந் துள்ளனர். இதேபோல் திண்டிவனம், செஞ்சி, திருக்கோவிலூர், வானூர், மரக்காணம் உள் ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருவதால் பொது மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.